
ஸங்கீத
செப்டம்பர் - 2025
ஸரிகமபதநி
இசை - நாட்டிய மாத இதழ்
ரூ.30/-
எனக்குத் தரப்பட்டது
ஸங்கீத 'ஸ்டீராய்டு'
- சித்ரவீணை கணேஷ்

With best compliments



**SRI. V.NARAYANA IYER MEMORIAL TRUST (REGD.)**

# NARAYANA VISHWANATH

**Chairman**

'Gitalaya' AD-48, AD-Block,
1st Street, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26212454 / 26214524
E-mail : nvishwat@gmail.com

# ஸரிகமபதநி

இசை – நாட்டிய மாத இதழ்

மலர் - 29 இதழ் - 11

தலைமைப் புரவலர்

பத்மஸ்ரீ. டாக்டர்.

**நல்லி குப்புசாமி செட்டியார்**

முதன்மை ஆசிரியர்

**நாராயணவிஸ்வநாத்** (RITES)

ஆசிரியர்

கலைமாமணி **ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்**

துணை ஆசிரியர்கள்

**சங்கர் வெங்கட்ராமன்**

**சிம்மம்குமார்**

**ஏவி. ஆர். வர்மா**

வடிவமைப்பு

**சி.ஜி.சுரேஷ்**

அச்சிடுபவர்

**டி.வேல்முருகன்,**
நியூ சித்ரா பிரஸ்
32, ஜீவரத்தினம் சாலை,
சென்னை-600081.

நிர்வாக அலுவலகம்

AD-48, முதல் தெரு, அண்ணாநகர்,
சென்னை - 600040.

அஞ்சல் முகவரி

**SARIGAMAPADANI**
POST BOX NO : 6050
ASHOK NAGAR, CHENNAI - 600083.

ஸரிகமபதநி பவுண்டேஷனுக்காக வெளியிடுபவர்

**இராம. பாஸ்கர்**

**Contact : 86670 03627 (MSG)**
**Web: www.sarigamapadani.in**
**E-mail - sangeethasarigamapadani@gmail.com**

**Our Sponsors**
**Nalli Chinnasamy Chetty**
Chennai - 600 017.


# ஸரிகமபதநி விருதுகளுக்கு பரிந்துரைப்பீர்...



**ஸ**ரிகமபதநி இசை – நாட்டிய மாத இதழின் சார்பில் ஆண்டு தோறும், கலையுலகில் முதல்நிலைக் கலைஞர்களாகக் கூடிய முகாந்திரம் பிரதிபலிக்கும் இளம் கலைஞர்களை தேர்வு செய்து பாட்டுக்கு “நாதஸ்ரீ' நாட்டியத்திற்கு ‘நிருத்யஸ்ரீ' கலைகளின் எழுத்திற்கு ‘வித்யாஸ்ரீ' என மூன்று பெருமைமிகு விருதுகளை வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறோம்.

இவர்கள் உலகளாவிய ஸரிகமபதநியின் வாசகர்கள் மூலமே தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பது இவ் விருதுகளுக்கான மற்றுமொரு சிறப்பு. ஸரிகமபதநியின் மேற்படி விருதுகளுக்கு கலையுலகில் பெரு மதிப்பு உண்டு என்பது அனைவரும் அறிந்ததே.

2025-ம் ஆண்டிற்கான தங்களின் பரிந்துரைகளை எமக்கு அனுப்பலாம்.

**- முதன் நிலை ஆசிரியர்**

# சிநேகத்துக்கு கிட்டப்பா... சங்கீதத்துக்கு எட்டப்பா...



வீணை தனம்மாள்

**த**னம்மாள், பாரம்பரியமிக்க சங்கீதக் குடும்பத்தில் 1868 – மே மாதம் தஞ்சாவூரில் பிறந்தார். இவருக்கு முந்தைய இரண்டு மூன்று தலைமுறையினர் சங்கீதத்தில் கொண்டிருந்த பிடிப்பே தனம்மாளின் மூலதனமாக அமைந்து இருக்க வேண்டும்.

இவரின் பாட்டியான தஞ்சாவூர் காமாட்சியம்மாள்தான் தனம்மாளின் மூலாதாரமும், பரம குருவும். இவர் சியாமா சாஸ்திரி, ஆனை ஐயர் ஆகியோரது சிஷ்யப் பரம்பரையைச் சேர்ந்தவர். அது போலவே, தனம்மாளின் மாமன்மார்களும், சகோதரர்களும் அந்நாளைய பிரபல பிடில் வித்வான் பொன்னுச்சாமிப் பிள்ளையின் சிஷ்யர்களாவர். இவர்களில் மாமனான அப்பாக்கண்ணு அசகாய சூரன்.

இவர் ஒருநாள் தன் குருவான பொன்னுச் சாமிப் பிள்ளை வீட்டில் அமர்ந்து சாதகம் செய்து கொண்டிருந்தார். உச்சிவேளை. குரு எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் நேரம் அது. குருவின் தாயார் சாதகம் செய்து கொண்டிருக்கும் தன்மையை வைத்து தன் மகன்தான் வாசித்துக் கொண்டிருப்பதாகக் கருதி “நாழியாச்சி... வந்து தலையில் எண்ணெய் வைத்துக் கொள்” என்று குரல் கொடுத்துள்ளார். “ஐயா இங்கே இல்லை” என்ற அப்பாக்கண்ணுவின் பதில் குரலைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தார் குருவின் தாயார்.

சிஷ்யனான அப்பாக்கண்ணு தன் மகனைப் போலவே திறமையாக வாசிப்பதனைக் கண்டு கலவரப்பட்டார் அப் பெண்மணி. அன்றே தன் மகனிடம் வாக்குவாதம் செய்து ஒரு சத்தியம் பெற்றாள். அதன்படி, அப்பாக்கண்ணுவின் சிக்ஷைக்கு அன்றோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

தனம்மாளின் தாயார் சுந்தரம்மாளும் கூட நன்றாகப் பாடக் கூடியவர்தான். இவரின் மெல்லிய சாரீரமே தனம்மாளுக்கும் வாய்த்ததாகக் கூறப்படுவதுண்டு. தனம்மாளும் அவரது தங்கை ரூபாவதியும் சிறுவயதில் ஜோடியாகப் பாடி வந்தார்கள்.

சகோதரிகள் திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், திருப்பாம்புரம் சுவாமி நாதப்பிள்ளை, சாத்தனூர் பஞ்சநாத ஐயர் ஆகியோர்களிடம் சங்கீதம் கற்றனர். கொஞ்ச நாட்களில் தனம்மாள் வீணை பக்கம் ஆர்வம் காட்டவே தங்கை ரூபாவதி மட்டும் தனியாகக் கச்சேரிகள் தந்து வந்தார். இவரின் பாடாந்திரம் பிரம்மாண்டமானது.

பின்னாட்களில் ரூபாவதி மட்டும் ஆந்திரப் பிரதேசம் சென்று அங்கேயே தங்கிக் கச்சேரிகள் செய்து புகழுடன் விளங்கினார். தம் வாரிசுகளுடன் 1959 வரை அவர் அங்கேயே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

தனம்மாளுக்கு நான்கு பெண்கள். ராஜலட்சுமி, லட்சுமி ரத்தினம், ஜெயம்மாள், காமாட்சி அம்மாள் ஆகியோர். மூத்த பெண்கள் இருவரும் 'தனம் பெண்கள்' (பெரிய குட்டி - சின்ன குட்டி) என்ற பெயரில் பாடலாயினர். ஜெயம்மாளும், கடைசிப் பெண் காமாட்சியம்மாளும் கூட ஜோடியாகப் பாடி வந்தனர். காமாட்சியம்மாள் பிடிலும், ஜெயம்மாள் தபேலாவும் வாசிப்பார்கள். தனது மூத்த சகோதரிகளுடன் இணைந்து ஒரே குழுவாக, குடும்பமாக பக்கவாத்யம் வாசித்துக் கச்சேரிகளை நிகழ்த்தத் திட்டமிட்டு இவ்விதம் பயிற்சி மேற்கொண்டனர்.

இவர்களில் ஜெயம்மாளின் மகளாகப் பிறந்தவர்தான் பரதத்திற்காக 'பத்மபூஷன்' விருது பெற்ற பால சரஸ்வதி. ஜெயம்மாவின் நான்காவது மகன் ரங்கநாதன். இவர், பழநி முத்தையாப் பிள்ளை, பழநி சுப்ரமணியப் பிள்ளை இருவருக்கும் சிஷ்யர்.

கடைசி மகன் விசுவநாதன். சங்கீதக் கலாநிதி திருப்பாம்புரம் சுவாமிநாதப் பிள்ளையிடம் புல்லாங்குழல் கற்றுக் கொண்டார். கூடவே உயர் கல்வியும் பயின்று எம்.ஏ. தேறிய பின் மத்தியக் கலாசாரத் துறையின் உதவியுடன் மூன்று வருடங்கள் இசை ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார். இதன்பின் அமெரிக்காவில் பல நாடுகளது சங்கீதம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

ஜெயம்மாள், முத்துத்தாண்டவர் பதங்களில் 'தெருவில் வாரானோ' கனம் கிருஷ்ணய்யர் பதங்களில் 'திருவெற்றியூர் தியாகராஜன்' ஆகிய இரண்டினையும் ரிக்கார்ட் தந்துள்ளார்.

காமாட்சி அம்மாளின் மூத்தப் பெண்களான பிருந்தா - முக்தா இருவரும் காஞ்சீபுரம் நாயனா பிள்ளையிடம் ஏழெட்டாண்டுகள் குருகுலவாசம் மூலம் பல கீர்த்தனைகளைக் கற்றுக் கொண்டனர். மூன்றாவது பெண்ணான அபிராம சுந்தரிக்கு ராஜமாணிக்கம்பிள்ளை, பாப்பா வெங்கட்ராமையா ஆகியோரிடம் பயிற்சி தரப்பட்டது. பிருந்தாவின் மகளான வேக வாஹினி ஆபூர்வ ஜாவளிகளைப் பாடும் திறன் பெற்று இருந்தார்.

இப்படியாக தனம்மாளுக்கு முன்பிருந்த

பிருந்தா - முக்தா



அக் குடும்பத்தவர் மட்டுமின்றி அவரது வாரிசுகளும் கூட சங்கீதத்திற்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

தனம்மாளுக்கு துவக்கத்தில் அழக சிங்கரையா என்ற வீணை வித்வானின் கிருபை கிடைத்தது. அந்நாளில் சென்னை, தங்கசாலைத் தெருவில் மாணிக்க முதலியார் எனும் தனவந்தரது இல்ல வெள்ளிக் கிழமை பூஜா காலங்களில் தனம்மாளும் - காமாட்சியம்மாளும் பாடுவார்கள்.

இவரது நல் ஆதரவினால் தனம்மாள் வீணைப் பயிற்சியினைத் தொடர்ந்தார். அந்

நாட்களில் வீணையில் பிரசித்தமாக இருந்தவர்கள் மயிலாப்பூர் கௌரியம்மாளும், அவரது சிஷ்யரான பதம் பாலகிருஷ்ணதாசும். தனம்மாள் சிஷ்யரிடம் பதங்களையும், தர்மபுரி சுப்பராவிடம் ஜாவளிகளையும் பாடம் செய்தார். தனம்மாளின் சங்கீதப் பெருமைகளை சுப்பராவ் 'ஸ்மரஸுந்தராங்குனி' ஜாவளியில் வர்ணித்து இருக்கிறார்.

தனம்மாளுக்கு சங்கீதத்தைப் பொறுத்தவரை கல்வி ஞானத்தைவிட கேள்வி ஞானத்திலேயே விருப்பம் அதிகம். திருவாங்கூர் கல்யாண கிருஷ்ண பாகவதரின் வீணை, சரப சாஸ்திரிகளின் பைரவி ராக வேணுகான ஆலாபனை, திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யரின் ராகபாவம், மந்த்ர ஸ்தாயி விந்யாசம் ஆகியவற்றில் அதிக பிரியமுள்ளவர்.

தனக்கு இளையவர்களாகிய சுவாமிநாதப் பிள்ளையின் வேணுகானம், கோவிந்தசாமிப் பிள்ளையின் பிடில் இரண்டையும் பாராட்டுவார். பெரும் இரைச்சலோ, சத்தமோ உள்ள சங்கீதத்தில் தனம்மாளுக்கு பிடிப்பு குறைவு. அதேநேரம், ராஜ ரத்தினம் பிள்ளையின் நாகசுவரம் கேட்பதில் மட்டும் இதற்கு விதிவிலக்கு அளித்திருந்தார்.

கனராகங்களில் தான் தனத்திற்குப் பிரியம். எதையும் வளர்த்துவது அவருக்குப் பிடிக்காது. ஒரு சுரத்தை முதன் முதலில் தொட்டவுடனே அது என்ன ராகம் என்பதனை புரிய வைத்து விடுவார். மூடு மந்திர வேலைகளை சங்கீத சாமர்த்தியமாக அவர் கருதுவதே கிடையாது. ஏழு நிமிடத்திற்குள் கனராக பஞ்சகத்தை ஒரு ரிக்கார்டுக்குள் பிழிந்து எடுத்து வராளியை


காஞ்சி நாயனா பிள்ளை


டி.என்.ராஜரத்னம் பிள்ளை

சிகரமாக வைத்துப் பாடிய கீர்த்தனாச்சாரியார் சி.ஆர்.சீனிவாச ஐயங்காரே தனம்மாளை வெகுவாகப் பாராட்டி உள்ளதே அதற்கு அத்தாட்சி.

இந்துஸ்தானி சங்கீதமும் இவருக்கு நிரம்பப் பிடிக்கும். பல முறை காசி யாத்திரை செய்தபோது பல வடக்கத்து வித்வான்களது சங்கீதத்தைக் கேட்டு இருக்கிறார். இவர்களில் ரஹமத்கானைப் பற்றி மிக விசேஷமாகக் குறிப்பிடுவார். இந்துஸ்தானி காபி ராகத்தில் தனம்மாள் தந்துள்ள 'குலந்தரும்' ரிக்கார்ட் இந்துஸ்தானியில் தனம்மாளுக்கு இருந்த ஈடுபாட்டினை தெளிவுபடுத்துவதாக அமைகிறது.

திருவாசகம், தேவாரம், சுலோகம் பாடுவதில் தனம்மாளுக்கு தனி வழி. பாடிக்கொண்டே வாசிப்பார். சாரீரமும், தந்தியும் ஒருபுறம் குழையும். மற்றொரு புறம். சாகித்யமும், ராகமும் பின்னி விளையாடும். ஒன்றை விட்டு ஒன்று இணை பிரியாது.

1936-ல் காங்கிரஸ் பொன் விழாக் கொண்டாட்டத்தின் போது கச்சேரியினை இடையில் நிறுத்திவிட்டு வாய் நிறைய வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொண்டிருந்திருக்கிறார் தனம்மாள்.தாம்பூலம் பக்குவமாகக் குழைந்தவுடன் 'அக்ரேக்ருத்வா' என்று சுலோகம் பாடத் துவங்கி உள்ளார். இதைப் பார்த்து முன் வரிசையில் அமர்ந்து இருந்த காங்கிரஸ் வாதியான சத்தியமூர்த்தி திகைப்படைந்தாராம். அடுத்த சில நொடிகளிலேயே தனம்மாள் அவரின்

## சப்சூட் - சூப்பர் ஸ்டார் ஆன கதை


எம்.எல்.வி.

*அன்று பெங்களூரில் லலிதாங்கி கச்சேரி செய்ய வேண்டும். ஆஸ்த்மா ஏற்படுத்திய அவஸ்தை காரணமாக அவரால் அங்கே செல்ல இயலவில்லை.*

*லலிதாங்கிக்குப் பதிலாக அவரது மகள் சென்றார். சபாக்காரர்கள் மண்டப வாயிலில் 'மதராஸ் லலிதாங்கி வசந்தகுமாரி' பாட்டு என பெரிய போர்டு வைத்து இருந்தனர்.*

*அந்தக் கச்சேரி மேடையில்தான் முதன் முதலாக 'எம்.எல்.வி' என்று நாமகரணம் சூட்டி அழைத்தனர். அது முதல் இப் பெயரே நின்று நிலைத்துவிட்டது.*

அச்சத்தினை போக்கி உள்ளார்.

வாக்குச் சுத்தம், ராகபாவம், அர்த்தபுஷ்டி ஆகிய ஒவ்வொரு அம்சமும் அச் சுலோகத்தில் நிறைவாக அமைந்து சத்திய மூர்த்தியின் மனதைக் கொள்ளை கொண்டது. கச்சேரி முடிந்ததும் வந்தனோபசாரம் சொன்ன சத்தியமூர்த்தி "இனி சுலோகம் பாடும்போது தனம்மாள் வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொள்ளாமல் இருந்தால் தான் எனக்குப் பெரிய ஏமாற்றமாக இருக்கும்" என்று சொல்லி ஆனந்தப்பட்டார்.

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும், கிருஷ்ண ஜெயந்தி, வருடப்பிறப்பு போன்ற சிறப்பு நாட்களிலும் தனம்மாள் வீட்டில் தவறாமல் மாலையில் வீணாகானம் நடக்கும். மழையானாலும், இடியானாலும் இந்த இசைமழை தடைபடாது. ஊதுவத்தியும், புஷ்பமும், அத்தரும், நிறைய வெற்றிலைப் பாக்கும் இருந்துவிட்டால் போதும் தனம்மாள் எதிர்பார்ப்பதெல்லாம் சலசலப்பு ஏதும் இல்லாத நிசப்தமான சூழ்நிலையே.

திருவெற்றியூர் தியாகையர், டைகர் வரதாச்சாரியார் போன்றவர்கள் தனம்மாளின் சங்கீத சகாக்கள். சொக்கட்டான் ஆட தியாகையர் தினமும் தனம்மாள் வீட்டுக்கே வந்து விடுவாராம்.

இவர் வருடம் தோறும் நடத்தும் கிருஷ்ண ஜெயந்தி உற்சவத்தில் தனம்மாள் அவசியம் வாசிப்பார். சப்தம் ஏற்பட்டு விடக் கூடாதே என்பதற்காக அநாவசியமான கூட்டத்தினை தவிர்க்க தியாகையர் ஒரு உபாயம் கூறுவாராம். இவருக்கு மிக இடைஞ்சலான சாரீரம் அதை வைத்து "இன்றைக்கு நானே பாடப் போவதாக அறிவித்து விடுகிறேன். கூட்டமே இருக்காது. தனம்மாள் நிம்மதியாக வாசிக்கலாம்." என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவாராம்.

தனம்மாள் வீட்டில் 1937-ல் ஒரு கல்யாணம். டைகர் பாட்டு, பாபா பிடில், பழநி முத்தையாப் பிள்ளை மிருதங்கம். கச்சேரி படு அமர்க்களம். பரீட்சை எழுதும் மாணவன் போல ஒருவிதப் பயத்துடனேயே டைகர் தனது நிகழ்ச்சியை முடித்தார். தனம்மாளிடம், "கரடியா கத்தற என்னையா உங்க வீட்டிலே பாடச் சொல்ல வேண்டும்" என்று கேட்டாராம் டைகர். அந்தளவிற்கு தனம்மாளின் விருப்பமான நிசப்த சூழல் அம்சம் சங்கீத உலகில் வெகு பிரசித்தம்.

வீணை வாசிப்பில் மீட்டு மிகவும் குறிப்பிடத்தக்கது. இவரிடம் மீட்டு கார்வை மிகுந்து கணிசமாக இருக்கும். தாளத் தந்தியானது மீட்டை விட மெலிந்து சுருதிக்கான கார்வையுடன் இருக்கும். நகம் வளராததால் தாளத் தந்திகளை மட்டும் பொன் நகத்தால் மீட்டிக் கொள்வார். கனத்த தந்திகளை உபயோகிக்க மாட்டார். பக்க வாத்யங்கள் வைத்துக் கொண்டதே இல்லை. பாடிக்கொண்டே வாசிப்பார். சில சமயங்களில் தன் மக்களிலொருவரை சேர்த்துக் கொண்டும் பாடுவதுண்டு.

தனம்மாளது வீணையினை அவரது நம்பிக்கைக்கு உரிய இரண்டொருவர்தான் தொட்டு எடுத்து வைக்க முடியும். மேளம் கட்டுவதனைக் கூட இப்படியான இரண்டொரு புள்ளிகள் தான் செய்வார்கள். வெகு நாட்களாக குருவப்பாச்சாரியாருக்குத் தான் அப்பெருமை வாய்த்தது. தனம்மாள் ஸ்ருதி செய்யும் போது குருவப்பாச்சாரி "அந்த ஸாரணியைக் கொஞ்சம் கவனியுங்கள்" என்று சொல்லக் கூடிய அளவிற்கு உரிமையுள்ளவர். இறுதி நாட்களில் திருவல்லிக்கேணி ஏழுமலை ஆசாரி.

தனம்மாவிற்கு அவ்வப்போது நகைச்சுவையும் எட்டிப் பார்க்கும். தன் சிஷ்யர் களில் ஒருவரை வர்ணிக்கும் போது "நம்மபையன் சிநேகத்துக்கு கிட்டப்பா, சங்கீதத்துக்கு எட்டப்பா" என்று சொல்லிச் சிரிப்பார்.

வெவ்வேறு விஷயங்கள் குறித்து எவ்வளவு பேசினாலும் எந்தச் சூழ்நிலையிலும் சங்கீதம் குறித்து மட்டும் பேசமாட்டார். அது ஏனோ தெரியவில்லை. சங்கீதம் அவரைப் பொறுத்தமட்டில் சாதனையோடு சரி. அதுபோல, பெண்களுக்குரிய அடக்கத்தினை மீறி ஆவேசமாகப் பாடுவதையும் அவர் ரசிக்க மாட்டார்.

1938-ல் தனம்மாளுக்கு உடல் நலிவுற்றது. துவாரம் வெங்கடசாமி நாயுடு, திருப்பாம்புரம் சாமிநாதப்பிள்ளை, ராஜரத்தினம்பிள்ளை போன்றவர்களை பிரத்யேகமாக வரவழைத்து அவர்களுடைய சங்கீதத்தினை தினமும் கொஞ்ச நேரம் கேட்டுவிட்டுத் தாமும் 10 நிமிடங்கள் வாசிப்பார்.



மயிலாப்பூர் கௌரி அம்மாள்



டைகர் வரதாச்சாரி

தான் இறப்பதற்கு பத்துத் தினங்களுக்கு முன்பு தன்னைப் பார்க்க வந்த டி.என்.ஆரை நாதசுரம் வாசிக்கச் செய்து தானே தம்புராவில் சுருதியும் போட்டாராம் தனம்மாள். பத்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. "தம்பி... இதென்ன ராகம் தெரியலியே" என்றாராம் கேலியாக. "எனக்குப் புரிந்த கனராகமாக கொஞ்சம் காம்போதி வாசிக்க வேண்டுமே" என்று கேட்டுள்ளார் தனம்மாள்.

"எங்கம்மாவிடம் போய் விளக்குமாற்றுப் பிசிறாக வாசித்தால் வேறென்ன கிடைக்கும்? இப்படியான செருப்படித்தான்!" என்று இச் சம்பவத்தை தனக்கே உரித்தான பாணியில் மற்றவர்களிடம் விவரிப்பாராம் மாமேதை டி.என்.ஆர்.

நவராத்திரியின் போது உடல்நலம் மிகவும் மோசமான போதும் தினமும் பூஜையில் வாசித்தார். கடைசி நாளன்று உடல் மிகவும் மோசமாகி நினைவு தவறிய போதும் கைகள் மட்டும் வெற்றிலைப் பாக்கிற்காக அங்குமிங்கும் அலைந்தது.

"எனக்கு பூமியில் எதன் மீதும் பற்று இல்லை. இந்த வீணையை விட்டுப் பிரியத்தான் மனம் வரவில்லை" என்பாராம்.

அக்டோபர் 15ம் தேதி நடு இரவு ஒரு மணிக்குத் தான் பெரிதும் நேசித்த வீணையை மட்டுமின்றி அவரின் சங்கீதத்தை நேசித்த ஆயிரமாயிரம் ரசிகர்களையும் விட்டுப் பிரிந்தார் தனம்மாள்.

**– எஸ்.பி.கவிராணி**



# அம்மணியின் ஆசை...

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களில் பிரதாப சிம்மனும் ஒருவன். இவன் மீது அவனது மாமன் மகளான அம்முனு அம்மணிக்குத் தீரா காதல். பராக்கிரம வீரனான அவனை மணக்கப் பலர் போட்டி போட்டனர். பிரதாப சிம்மனைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன் என உறுதிபட இருந்தாள் அம்மணி.

தன் எண்ணமது நிறைவேறினால் தலைநகராம் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோவிலில் 'இலட்ச தீபம்' ஏற்றுவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

காலம் கனிந்தது. காதலும் நிறைவேறியது. வேண்டுதலை பூர்த்தி செய்திட ஆலய வளாகத்தில் இலட்ச தீபம் ஏற்ற ஏற்பாடாகியது. பணியாட்கள் மூலம் சுடர்விடும் தீபங்களின் எண்ணிக்கையை சரிபார்க்க எண்ணப்பட்ட போது 99,999 தீபங்கள் பிரகாசிக்க ஒன்றே ஒன்று மட்டும் குறைவது தெரியவந்தது.

இதனை அறிந்த அம்மணி அக்குறைவினை ஈடுகட்ட தன் கைகளையே அகல் விளக்காக குவித்து அதில் லட்சமாவது தீபத்தினை ஏற்றும்படி கட்டளையிட்டாள். இந்தக் கோலத்தை அப்படியே வடிவமைத்து 'கோயில் நாச்சியாராக' இருக்கவும் விரும்பினாள்.

அரசவை விஸ்வகர்மா அவசரமாக அங்கே வரவழைக்கப்பட்டார். தீப ஜோதியில் ஜொலிக்கும் அம்மணியின் எழில் நிறைந்த தோற்றத்தினை அப்படியே ஜீவன் நிறைந்த பாவை விளக்காக விஸ்வகர்மா 'கன்னார அரிபுத்திரபத்தர்' வடித்துக் கொடுத்தார். தோளில் ஒரு கிளியுடன் இன்றைக்கும் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்தில் காட்சி தரும் இப் பாவை விளக்கின் நேர்த்தியும், கலை அம்சமும், உயிரோட்டமும் காண்போரை மெய் சிலிர்க்கச் செய்யும்.

இப்பாவை விளக்கின் பீடத்தில் அதனை வடிவமைத்த விஸ்வகர்மாவின் பெயரும் பொறிக்கப்பட்டு உள்ளது. தமிழர்களின் தலைசிறந்த கலைபடைப்பிற்கும், கும்பகோணம் வட்டார சிலை தயாரிப்புக் கலை மாண்பிற்கும் இந்த பாவை விளக்கு என்றென்றும் சான்றாக விளங்கும்.

**- எம்.ஜி.ஆர். மைந்தன்,**
**திருவிடைமருதூர்**




# தலைப்பறை



தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுகள் காணக் கிடைத்தபோதிலும் அவற்றுள் ஐம்பது விழுக்காடு அளவிலேயே படியெடுக்கப்பட்டு உள்ளன. அவற்றுள்ளும் பத்து விழுக்காடு கல்வெட்டுகளே பாடங்களுடன் வெளியாகியுள்ளன. இந்த பத்து விழுக்காடு கல்வெட்டுகளும் முழுமையான அளவில் வரலாற்றா சிரியர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளனவா எனில், வரலாற்றுப் புத்தகங்கள் இல்லை என்றே 'பறை' சாற்றுகின்றன.

கொடை ஆவணங்களாகவும், ஒப்பந்த பதிவுகளாகவுமே பெரும்பான்மையான கல்வெட்டுகள் இருந்த போதும், அவை அள்ளித்தரும் வரலாற்றுத் தரவுகள் பல்துறை சார்ந்தவை, பன்முகத்தவை, ஆழ்ந்த பரிமாணமுள்ளவை.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளின் கலைசார்ந்த தரவுகள் இன்றளவும் முழுமையான அளவில் தொகுக்கப்படாமைக்கு கலைத்துறைகளும், வரலாற்றுத் துறையும், தமிழ்த்துறையும் ஒன்றிணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளாமையைத்தான் காரணமாகக் கூற முடியும்.

'உவச்சர்' என்ற சொல் கல்வெட்டுகளில் கருவிக் கலைஞர்களைக் குறிக்கும் பொதுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளது. இராஜகேசரி வர்மனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் வழங்கப்பட்டுள்ள திருச்செங்கோடு செப்பேடு 'பஞ்சமா சப்தம்' கொட்டும் உவச்சர்க்கு நிலமளிக்கப்பட்டதாகக் கூறுவது இங்கு நினைக்கத் தக்கது.

இந்த 'பஞ்சமா சப்தம்' என்பது தோல் கருவியின் ஒலி, கஞ்சக் கருவியின் ஒலி, காற்றுக் கருவியின் ஒலி, நரம்புக் கருவியின் ஒலி இவற்றோடு மிடற்றொலியும் இணைந்த ஐந்தொலிக் கூட்டினைக் குறிப்பிடுகிறது.

தமிழகத் திருக்கோவில்களில் பல்லவர் காலத்திலிருந்தே கருவிக் கலைஞர்கள் இடம் பெற்றிருந்தனர் என்றாலும், சோழர் காலக் கல்வெட்டுகளே அவர்களை முறையாகவும், விரிவாகவும் அடையாளப்படுத்துகின்றன. சோழர் காலக் கருவிக் கலைஞர்களாகக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுபவர்களில் 'தலைப்பறையும்' ஒருவர். உவச்சர்களில் ஒருவராகக் குறிக்கப்படும் இத் தலைப்பறை கருவிக் கலைஞர்களே ஏனைய கலைஞர்களுக்கு வழிகாட்டும் தலைவராக, இசையாசிரியராக விளங்கி இருக்க வேண்டும். இதனை மெய்ப்பிக்கும் வகையில் இப்பெயரமைவும் அதற்கான சில கல்வெட்டுகளும் அமைந்துள்ளன. தமிழகத்தின் பெருமைக்குரிய கோயில்களில் இத் 'தலைப் பறைகள்' இருந்தமைக்கும் கல்வெட்டுகள் உள்ளன.

குத்தாலம் உக்தவேதேசுவரர் திருக்கோயிலில் பனிரெண்டு உவச்சர்கள் பணியாற்றினர். இவர்களுள் மூவர் மத்தளம் வாசிக்கும் கலைஞர்கள். இவர்களை 'உகச்சுத் தலைப்பறை' என்ற பெயரால் இங்குள்ள கல்வெட்டு பெருமைப்படுத்துகிறது.


மேல்சேவூர் ரிஷபபுரீசுவரர் கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டு இக்கோவிலில் பனிரெண்டு உவச்சர்கள் பணியாற்றியதைக் கூறுகிறது. இவர்களுள் ஒருவர் திமிலையும், ஒருவர் மத்தளமும், ஒருவர் கறடிகையும் வாசித்தனர். இவர்களில் ஐவர் மத்தள வாசிப்பில் திளைத்தனர். தலைப்பறையாக ஒருவர் இருந்து பனிரெண்டு பேர்களையும் வழிநடத்திச் சென்றுள்ளார். இவரை இக்கல்வெட்டு 'உகச்சள் தலைப்பறைக் கொட்டி' என்று சிறப்புச் செய்கிறது. இவருக்கு மட்டும் நாளொன்றிற்கு குறுணி இருநாழி நெல் ஊதியமாக வழங்கப்பட்டது. 'மண்டை' என்கிற வாத்யத்தை கொட்டியவர் நான்கு நாழி நெல் பெற்றாராம்.

இந்த ஊதிய விகித மாறுபாடுகளே பிற கருவிக் கலைஞர்களிடமிருந்து தலைப்பறை வேறுபட்டு, பணியால் உயர்நிலைப் பெற்று விளங்கியதை மெய்ப்பிக்கப் போதுமான



சான்றுகளாக அமைகிறது. இதே கோவிலில் கோவில் பணியில் இருந்தவர்களாக பதினாறு உவச்சகர்களை முதலாம் இராசேந்திரனது மற்றொரு கல்வெட்டு அடையாளப்படுத்துகிறது. இவர்களைக் குறிப்பிடும்போது "ஸ்ரீபலி கொட்டும் உவச்சர் தலைப்பறைக் கொட்டி உள்ளிட்டார் பதினைவர்க்கு" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டு இருப்பதும் கவனத்திற்கு உரியது.

உத்தமச் சோழரால் வழங்கப்பட்ட சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் காஞ்சிபுரத்து ஊரகத்து நின்ற பெருமாள் கோயிலைப்பற்றிப் பேசுகின்றன. இக்கோயிலில் ஒன்பது உவச்சர்கள் பணியாற்றினர். அவர்களுள் இருவர் மத்தளம் வாசிக்க, ஒருவர் கறடிகை இசைத்தார். இருவர் காளமும், ஒருவர் தாளமும், ஒருவர் செகண்டியும், ஒருவர் கைம்மணியும் ஒலித்தனர். இவர்களை வழிநடத்த இக்கோயிலில் தலைப்பறை ஒருவர் இருந்தமையை



எடுத்துரைக்கும் சென்னை அருங் காட்சியகச் செப்பேடுகள் அவரை ‘உகச்சகள் தலைப்பறை’ என்றே குறிப்பிடுகின்றன.

கோனேரிராசபுரத்து உமாமகேசுவரர் திருக்கோயிலானது செம்பியன் மாதேவியால் கண்டராதித்தர் நினைவாகக் கற்றளியாக்கப் பட்டதாகும். இங்கு உத்தம சோழர் ஆட்சிக் காலத்தில் பெருந்திரளான உவச்சர்கள் இசைப்பணியாற்றினர். மத்தளம் வாசிக்க நால்வர் பணியில் இருந்தனர். தாளம் ஒரணையும், கைம்மணி ஈரணையும் வாசிக்கப்பட்டன. கறடிகை, திமில் ஆகிய தோல்கருவிகள் தலைக்கு ஒன்றாய் இசைக்கப்பட்டன. நான்கு காளங்கள், இரண்டு சங்குகள் இசை தர இசை நிகழ்ச்சிகளும், வழிபாட்டுச் சடங்குகளும் நடந்தேறின.

தமிழகத்தில் வேறெந்தக் கோயிலிலும் வாசிக்கப் பெறாத ‘செண்டை’ எனும் தோற்கருவி இக்கோயிலில் வாசிக்கப் பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. இரண்டு செண்டைகள் இங்கே வாசிக்கப்பட்டன வாம். இவர்களை மேற்பார்வையிட பாரசிவன் வெண்காடன் நக்கமாணி, சீராளன் மாதேவன், திருப்புகலூர் வரகுண நல்லாறன் ஆகியோர் உவச்சர்களாக இருந்தனர். இவர்கள் அடங்கிய இசைக் குழுவினை நெறிப்படுத்தவும், இசை நிகழ்ச்சிகளை முறைப்படுத்தவும் உத்தம சோழர் காலத்தில் இங்கு இரண்டு தலைப்பறைகள் பணியில் இருந்தனர்.

தமிழ்நாட்டளவில் இரண்டு தலைப்பறைகள் பணியாற்றிய ஒரே திருக்கோயிலாக கோனேரிராசபுரம் உமாமகேசுவரர் திருக்கோயிலைக் குறிப்பிடலாம். இக்கருவிக் கலைஞர்களுக்குத் திருநல்லத்தில் வாழ்வூதியமாக நிலம் ஒதுக்கப்பட்டு இருந்ததை அவற்றின் அளவுகளோடு கல்வெட்டு எடுத்துரைக்கிறது.

இதே கோயிலில் முதலாம் இராசராசனின் பனிரெண்டாம் ஆட்சியாண்டில் ஏழு உவச்சர்கள் பணியில் இருந்தனர். கல்வெட்டு இவர்களை ‘இதேவர்க்கேய் பணி செய்யும் உவச்சர்கள்’ என்று அன்புடன் அழைத்துப் பெருமைப் படுத்துகிறது. உத்தமச் சோழர் காலத்தில் அமர்த்தப்பட்டவர்களோடு புதியதாக சில கலைஞர்கள் முதலாம் இராசராசன் காலத்தில் பணியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு வாழ்வூதியமாக ஒதுக்கப்பட்டு இருந்த நிலங்களின் விரிவான பட்டியலை கல்வெட்டில் காணுகையில் இவர்கள் புதிதாக பணியமர்த்தப்பட்டவர்கள் என்பது

உறுதியாகிறது.

திருவக்கரை சந்திர மௌலீஸ்வரர் கோயிலும் செம்பியன் மாதேவியால் கற்றளிக்கப்பட்டதே. 'சிவலோகம்' என்றழைக்கப்படும் இக்கோயிலில் நான்கு உவச்சர்கள் பணியாற்றினர். இவர்களுள் ஒருவர் தலைப்பறை கொட்டுவானாக இருந்தார். இவருக்கு குறுணி நெல் தரப்பட்டது.



பிற இசைக்கருவிகளுக்கும், கலைஞர்களுக்கும் கிடைக்காத இச்சிறப்பு பறைக்கும், அதனை இயக்கியவருக்கும் மட்டும் கிடைத்தமைக்கு என்ன காரணம் என்றாய்ந்தால் பழந்தமிழ் காலத்தில் 'பறை' இசைக்கருவிகளில் முதலிடம் பெற்று இருந்ததனை அறிய முடிகிறது.

தொண்டகப்பறை, ஏறுகோட்பறை, நெல்லரிப்பறை, மீன் கோட்பறை என்று குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நில மக்களின் வாழ்வோடு ஒன்றிய இசைக்கருவியாகச் சங்க காலந்தொட்டே 'பறை' திகழ்வதனை உணர முடிகிறது.

குறும்பறை (புறம் 67-9), அரும்பறை (பதிற் 75-9), இரும்பறை (புறம் 2631-2, 388-3), கொடும்பறை, கடும்பறை (மலை 523, 236), சிறுபறை (குறுந் 375), வன்பறை (அகம் 33-4) என்று சங்க இலக்கியங்களில் பலபடப் பாராட்டப்படும் இப்பறை கோடியரின் முதன்மை இசைக்கருவியாய்த் திகழ்ந்தது. (மலை 523) இக்கருவியினை ஆடுமகளிர் ஒலித்தாடியதை 'ஆடுமகள் அரிக்கோற்பறையின் ஐயென ஒலிக்கும்' எனும் அகநானுற்றுப் பாடலடி (156) கொண்டு அறியலாம்.

பறை தோளில் கோத்து இசைக்கப்பட்ட கருவி என்பதனை 'சிறு தோள் கோத்த செவ்வரிப்பறை' எனும் நற்றிணைப் பாடலடி (58) இனிதே விளக்கும். பறையில் மான்தோல் கட்டப்பட்டு இருந்ததையும், குரவையாடலுக்குத் தனித்ததொரு கருவியிசையாய்ப் பறையிசையே தாளம் தந்ததையும்

நறவு நாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு

மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென

வான்தோய் மீமிசை அயரும் குரவை

எனும் மலைபடுகடாம் அடிகள் (320-323) தெளிவுற உணர்த்துகின்றன. வேங்கை சூடி ஆடவரும் - பெண்டிரும் இப்பறையிசைக் கலந்தாடியதனை அகம் (118 2-4) புலப்படுத்துகிறது. கலைஞன் தன் உள்ளத்தில் நினைத்தவற்றை எல்லாம் ஒலியாகத்தரும் இயல்புடையது பறை என்கிறது கலித்தொகை (92:21)

இப்பறையை இயக்கியவர்கள் கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞராகவும் இருந்தமையை அகம் (194) விளக்கும். பறையொடு தகைத்த கலப்பையினராய்க் கலைஞர்கள் பயணம் மேற்கொண்டதையும் (புறம் 371.5) இசைக் கலைக்கு பயன்பட்டார் போல வழித்துணைக்கும், விலங்குகளை விரட்டவும் பறை பயன்பட்டமையை சங்க இலக்கியங்கள் விவரிக்கின்றன. தமிழகத்து திருக்கோயில்களில் கண்டெடுக்கப்பட்டு உள்ள எண்ணற்ற கல்வெட்டுகளும் இதையே உணர்த்துகின்றன.

**– டாக்டர் இரா.கலைக்கோவன்**

# சங்கீதத்தை உனக்காகப் பாடினால்... வூட்டுக்குள்தான் பாடிக்கணும்.

– திருவெண்காடு ஜெயராமன்



பத்தொன்பது வருஷங்கள். ஆம்... முழுசாகப் பத்தொன்பது வருஷங்கள். அந்த மகாத்மாவுடன், உலகமெல்லாம் போற்றுகிற சங்கீத மேதையுடன் வாழ எனக்குக் கொடுத்து வைத்திருந்தது. என் பூர்வ ஜென்ம புண்ணியம் குருநாதனாய் வடிவு கொண்டு என்னைக் கடைத்தேற்றியது.

சீர்காழிக்கு அருகிலுள்ள திருவெண்காட்டில் இருந்த எங்கள் குடும்பத்துக்கு அதிக சங்கீத சம்பந்தம் இல்லை. எங்கள் குடும்பத்திலிருந்து சங்கீதத்திற்கு என்று முதலில் வந்தவன் நான்தான். என் தாத்தா வெங்கட்ராம சாஸ்திரி வேத வித்து. என் தகப்பனாரும் அப்படியே. என் பெரியப்பா மிக அற்புதமாக ஓவியங்களை பார்த்தது பார்த்தபடி தத்ரூபமாக வரைவாராம். இவற்றை ரசித்த எல்லோருமே என் தாத்தாவிடம் “அவருக்கு முறையாகப் பயிற்சி தந்தால் சிறந்த ஓவியராக மிளிர்வார். பேரும் புகழும் பெறுவார்” என்றார்களாம்.

“எங்கள் தலைமுறையில் வேதம் படிக்காமல் வேறு வேலை செய்வதாவது” என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார் தாத்தா. இப்படிப்பட்ட குடும்பத்தில் சங்கீதம் படிக்க எனக்கு வாய்த்தது என்பது தெய்வ சங்கல்பம். என் சிறு பிராயத்திலேயே யாராவது பாடக் கேட்டால் அதனை அப்படியே திரும்ப பாடி விடுவேனாம். ஒருநாள் என்பாட்டி ஸ்வாமி மீது ஏதோ பாட்டுப் பாடிக் கொண்டிருக்க அதைக் கேட்டு அப்படியே நானும் பாடினேன். அதனைக் கேட்ட என் தாத்தாவிற்கு அந்த நிமிடம் என்ன தோன்றியதோ “இந்தப் பயலுக்குச் சங்கீதம் வரும் போலிருக்கிறதே? சொல்லிக் கொடுத்துப் பார்க்கலாம்” என்றார்.

அப்படிச் சொன்னதோடு நிற்காமல் எங்கள் ஊர் அகோர நாயனக்காரரிடம் எனக்கு சங்கீதம் கற்றுத்தரச் சொல்லி அவருக்கு மாதம் 2 ரூபாய் சம்பளமும் பேசினார். தாத்தா மனம் இவ்வளவு தூரம் மாறியது தெய்வ சங்கல்பம் அல்லாமல் வேறென்ன?

பாட்டோடு பள்ளிக் கூடமும் சென்று வந்தேன். அந்த நாளில் எங்கள் ஊரான திருவெண் காட்டில் பள்ளிக்கூட வசதி கிடையாது. வெகுதூரம் நடந்து சென்று படிக்க வேண்டி யிருந்தது. ஒரு கட்டத்தில் பாட்டுக்காகப் படிப்பிற்கு முழுக்கு போட வேண்டிய தாயிற்று. தொடர்ந்து எங்கள் உறவினரான மெலட்டூர் சுவாமிநாத தீட்ஷிதரிடம் கும்பகோணத்தில் ஐந்து வருடம் சிட்ஷை. இந்த சூழலில் என் குடும்பம் மிகவும் நொடித்துப் போனது. குடும்பத்தை கவனிக்க வேண்டி திருவெண்காட்டிற்கே திரும்பினேன். மீண்டும் பாட்டுப் பசி எடுக்க ஆரம்பித்தது.

இதன்பின் சங்கீதம் கற்றுக் கொள்ள ஒரு சரியான குருவைத் தேடி நான் அலைந்த அலைச்சலும், பட்ட கஷ்டங்களும் தனிக்கதை. அத்தகைய கஷ்டங்கள் இடையேயும் கடவுள் என்னைக் கையைப் பிடித்து நடத்திக் கொண்டு போய்விடுவார். இது என் வாழ்வில் தொடர்ந்து நடந்தது. அது போலத்தான் இந்த பிரச்னையும் நல்ல முடிவிற்கு வந்தது.

என் பாட்டி சொன்னபடி ப்ளூட் ராஜாராமையர் என்பவரிடம் கற்றுக் கொள்ளலாம் என அவரைப் பார்க்க மாயவரம் போனேன். அது 'எவாகுவேஷன்' நேரம். மாயவரத்தில் அப்போது என் குருநாதர் மணி அய்யர் இருந்தார். வீட்டு வாசலில் அவரின் பெயர்ப் பலகை. பார்த்ததும் எனக்கொரு சபலம். "இவரிடம் போய் நம் நிலைமையைச் சொல்லிப் பார்ப்போம். ஏற்றுக் கொண்டால் அதிருஷ்டம் தானே" என்று நினைத்து வீட்டு வாசலுக்குச் சென்றேன். உள்ளே வேம்பு அண்ணா (சங்கர நாராயணன் தகப்பனார்) பாடிக்கொண்டிருக்கிற குரல் கேட்கிறது. வாசலில் நின்ற என்னைக் கவனித்த அவர் வெளியில் வந்து விசாரித்து உள்ளே அழைத்துச் சென்றார்.

"இந்தப் பையன் உங்களிடம் பாட்டுக் கத்துக்ணும்னு கேக்கறான்" என்று வேம்பு சொல்கிறார். அவர் யாரிடம் பேசுகிறார் என்று பார்க்க முடியாதபடி நடுவில் ஒரு ஸ்கிரீன் மறைக்கிறது. அந்தப் பக்கம் என் குருநாதர் உட்கார்ந்து இருக்கிறார். "அந்தப் பையனை ஏதாவது பாடச் சொல்லு" என்று குரல் கேட்கிறது.

நான் வீட்டின் முற்றத்தை ஒட்டிய இடத்தில் உட்கார்ந்து கொண்டு தியாகராஜரின் 'ஆடமோடி கலதே' கீர்த்தனையை பாடினேன். அவருக்கு அது பிடித்ததா... பிடிக்கலையா என்று தெரியவில்லை. "நீ எங்கு இருக்கிறாய்?" என கேட்டார் குருநாதர். சொன்னதும் "திருவெண்காட்டிலிருந்து இங்கு தினமும் எப்படி வந்து போவாய்? ரொம்ப தூரமாச்சேப்பா... எட்டு மைல்களுக்குமேல் நடக்கணுமே" என்று கவலைப்பட்டார். நானோ 'அடிச்சது பிரைஸ்' என்ற சந்தோஷத்தில் 'அதெல்லாம் கஷ்டமில்லை. வந்துடுவேன்' என்றேன்.

உடனே அவர் "நான் ஊரில் இருப்பது கம்மி. அதையெல்லாம் பார்த்து சிட்க்ஷை வச்சுக்கலாம்" என்றவர் பஞ்சாங்கத்தை எடுத்து வரச் சொன்னார். அவரே நாள், கிழமை எல்லாம் நன்றாகப் பார்க்க கூடியவர் என்பதால் ஜுன் மாசம் 9-ம் தேதி ஆரம்பிச்சுருவோம்... அன்னிக்கு வந்துரு" என்றார். அன்று ஆரம்பித்த அவருடனான பந்தம்; ஒரு ஜுன்-9ம் தேதி தொடங்கிய அந்தப் பாக்கியம் 19 வருஷம் கழித்து அதேபோல் ஒரு ஜுன் 8ம் தேதி முடிந்தது. அன்று அவர் இல்லை.



மதுரை மணி ஐயர்



நடிகர் டி.எஸ்.பாலையா

குருநாதர் ஊரில் இருந்த நாட்களில் திருவெண் காட்டிலிருந்து நான் காலை ஆறு மணிக்குக் கிளம்பி எட்டு மைல் தூரம் நடந்து மாயவரம் போய்க் கற்றுக் கொண்டேன். கொஞ்ச நாள் போனதும் ஒரு பழைய சைக்கிள் கிடைத்தது.

போகப் போக நான் குருவின் குடும்பத்தில்

ஒருவனாகிவிட்டேன். குருநாதர் சென்னைக்குத் திரும்பும்போது என்னைக் கூப்பிட்டு “நீயும் எங்களோடு மெட்ராஸுக்கு வந்துரு” என்று சொல்லி என்னையும் உடன் அழைத்து வந்தார்.

என் குருநாதரிடமிருந்து நான் பாட்டை மட்டும் கற்றுக் கொள்ளவில்லை. வாழ்க்கையையும் கற்றேன். அவரது பேச்சும், செயலும் எதுவாயினும் அது மேம்போக்காக இருக்காது. ஆழ்ந்து, உணர்ந்தே செய்வார். பாடகர்களுக்கு பாட மட்டுமே தெரியும். உலக ஞானம் கிஞ்சிற்றும் இருக்காது என்பார்கள். அதனை பொய்யாக்கியவர் என் குருநாதர். ரேடியோ நியூஸ் தவறாமல் கேட்பார். கண் பார்வை மங்கி படிக்க முடியாத நிலையில் கூட என்னை ‘ஹிந்து’ வாசிக்கச் சொல்லிக் கேட்பார். ஆங்கிலம் அவ்வளவாக தெரியாத நான் ஆங்கிலம் கற்றதே அப்படித்தான்.

என் குருநாதருக்கு தவசுப் பிள்ளையைக்காட்டிலும் நன்றாகச் சமைக்கத் தெரியும். அவரது பேச்சில் இடம்பெறும் பல உவமானங்கள் சமையல் கலையை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அவரது நெருங்கிய நண்பரான ராஜண்ண செட்டியார் என்பவரிடம் ஒரு நல்ல சங்கீதம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நாக்கில் நீர் ஊறுகிற அளவிற்கு வர்ணித்தார்.

கும்பகோணம் ஈயச் சொம்பில் எலுமிச்சம் பழ அளவு புளியைப் போட்டு என்று ஆரம்பித்து நெய்யில் தாளிப்பது வரை அழகாக கேட்பவர் சப்புக் கொட்டாத குறையாக வர்ணித்தார். “இத்தனைக்குப் பிறகு மேலே தெளிந்து நிற்கிறதே அதுதான் ரசம். ருசிக்கிற சங்கீதம். அப்படி ருசிக்கக் காரணமாக இருப்பது அடியில் தேங்கி நிற்கிற அந்த வண்டல். தொடக்க நாட்களில் உழைக்கிற உழைப்பு, பாடாந்தரம், ஸ்ருதி சுத்தம் இதுபோன்ற அம்சங்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஞான வண்டலாகப் புத்தியில் தேங்கினால்தான் நல்ல ருசியான, தெளிவான சங்கீத - ரசம் கிடைக்கும்” என்றார்.



லால்குடி ஜெயராமன்



பாலக்காடு மணி ஐயர்



ஜி.என்.பாலசுப்ரமணியம்

சங்கீதத்தைப் பொறுத்தவரை அவரது அடிநாத எண்ணம் அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒன்று. “ஜனங்களுடைய மனசை ஆனந்தத்தில் ஆழ்த்துவதுதான் கலைஞனின் கடமை. எனக்காக நான் பாடிக்கிறேன் என்றால் அதனை உன் வீட்டிற்குள்ளேதான் பாடிக்கணும். பொது மேடை என்று வந்துவிட்டால் உன்பாட்டினை ஆசையோடு கேட்க வருகிறவரை மதித்து அவரது மனங்களை சந்தோஷப்படுத்த வேண்டும்” என்பார்.

சென்னை, கபாலி கோயிலில் கச்சேரி. நிகழ்ச்சி முடிய கொஞ்ச நேரமே உள்ளது. அப்போதே மணி இரவு பத்துக்கும் மேல். ஒரு ரசிகர் ‘சக்கனிராஜ பாடுங்க’ என்று குரல் கொடுத்தார். சந்தோஷமாய் பாடினார். வீடு திரும்பும் போது நான் அவரிடம் “உடம்பு வேறு சுகமில்லை என்றீர்கள் அந்தக் கீர்த்தனையை தவிர்த்து இருக்கலாமே” என்றேன்.

## முத்தமிழ்

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணியென்னா
வழுத்துஞ் சுருதிகர வன்னம் - அழுத்துந்
தனிவொற்றுப் பாவனை தாள மிரசம்
பனிரண்டிலக் கணமாம் பார்.

இயற்றமிழ் : எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களும், இலக்கியங்களும்.

இசைத் தமிழ் : சுரம், சுருதி, இராகம் என்னும் மூன்றின் இலக்கணங்களும், பன்னீராயிரம் ஆதி இசைகளும் - பண்களும்.

நாடகத் தமிழ் : தாளம், பாவனை, அலங்காரம், இரசம் என்னும் நான்கு அங்கங்களைக் கொண்டது.




"ஜெயராமா... இதுபோல கோவில் கச்சேரிக்கு வர்ற ரசிகர்களில் வசதி வாய்ப்பற்றவர்கள்தான் அநேகர் இருப்பர். அவர்கள் பெரும் தொகை கொடுத்து டிக்கட் வாங்கி சபாக்களுக்கு வர முடியாது. இப்படிப்பட்ட சாதாரண ஜனங்களை வேறு எங்கே நம்மால் மகிழ்ச்சிப்படுத்த முடியும். அதுமட்டுமில்லே; கேட்டால் நான் பாடுவேன் என நம்பி அவ்வளவு நேரம் எதிர்பார்ப்போடு காத்திருந்தவனை ஏமாற்றக் கூடாதல்லவா" என்றார்.

நடிகர் பாலையாவின் பெண் திருமணம். ஆபட்ஸ்பரியில் நடந்தது. பாலையா நடிகர் மட்டுமல்ல; சங்கீத ஞானம் மிக்கவர். "கல்யாணக் கூட்டத்தில் உங்கள் கச்சேரியை என்னால் அமர்ந்து கேட்க முடியாது. எனவே கூட்டமெல்லாம் கலைந்தபிறகு 9 மணிக்கு மேல் எனக்காகவும் பாட வேண்டும்" என்றார். அதற்கு என் குருநாதரும் ஒப்புக்கொண்டார்.

அந்த தனிக்கச்சேரியில் டி.கே.எஸ். சகோதரர்கள், நடிகர் சாரங்கபாணி, எம்.கே.ராதா என நூறே பேர். ஆனால் சங்கீத ஞானத்தில் இவர்கள் ஒவ்வொருவருமே நூறு பேருக்குச் சமமானவர்கள். என் குருநாதர் மட்டுமல்ல, பக்கவாத்தியங்களான லால்குடி, பாலக்காடு மணி, பழனி சுப்புடு என ஒவ்வொருவரும் பிச்சி உதறினார்கள். தனி ஆவர்த்தனத்தில் நெருப்பு பொறி பறக்காத குறை. இதுபோன்ற வித்வாம்சம் நிறைந்தவர்களின் பாராட்டிற்கும் உரியவராக என் குருநாதர் திகழ்ந்தார்.

குருநாதர் மயிலாப்பூரில் நாகேஸ்வரராவ் பார்க் அருகில் குடியிருந்தபோது நாகசுர சக்ரவர்த்தி டி.என்.ராஜரத்தினம் பிள்ளையும், ஜி.என்.பி.யும் வரவே குருநாதருடன் மணிக்கணக்கில் அரட்டைக் கச்சேரி நடக்கும்.

திருமண நிகழ்ச்சிகளில் பாடும்போது மங்களத்திற்கு மாறான சொற்கள் ஏதும் இடம் பெற்று விடாமல் சர்வ ஜாக்கிரதையாகப் பாடுவார். அப்படியான சொற்கள் இடம்பெறும் சமயங்களில் அதனை உச்சரிக்காமல் நீளமாகக் கார்வை கொடுத்துக் கொண்டே அடுத்த வரிக்குப் போய்விடுவார். தம்பூர் ஸ்ருதியோடு சேர்ந்து அவர் குரல் அப்படியே கரைந்து போகும்போது மெய்சிலிர்க்கும்.

போங்கடா... போங்க... அந்த சொகத்தை எல்லாம் சொன்னால்லாம் புரியாது... அனுபவிச்சவனுக்குத்தான் தெரியும். எவ்வளவு பெரிய கொடுப்பினை என்று...

**- சியாமளா**

# எனக்குத் தரப்பட்டது ஸங்கீத ‘ஸ்டீராய்டு’



– சித்ரவீணை கணேஷ்

‘**கோ**ட்டு வாத்யம்’ அல்லது ‘சித்ரவீணை’ என்பது மிகவும் தொன்மையான இசைக் கருவி. 21 தந்திகள் கொண்ட இக் கருவி கிட்டத்தட்ட இந்துஸ்தானி இசையுலகின் ‘விசித்ர வீணைக்கு’ இணையானது. நமது பாரம்பரிய வீணையை ஞாபகமூட்டும் தோற்றம் கொண்டது. மீட்டுகள் இல்லாத இக் கருவி மரத்தில் குடைந்து எடுக்கப்பட்ட தண்டு உடையது. 32 அங்குல நீளமும், 4 அங்குல அகலமும் கொண்டது. 6 முக்கியத் தந்திகளையும், 2 செகண்டரி தந்திகளையும் மற்றுமுள்ள தந்திகளையும் உள்ளடக்கிய ‘சித்ர வீணை’ குறித்து பரத முனிவரின் ‘நாட்டியச் சாஸ்திரம்; சாரங்க தேவரின் ‘சங்கீத ரத்னாகரம்’ போன்றவைகளில் (விபான்சி வீணை) குறிப்புகள் காணப்படுகின்றன.

மராட்டியத்திலிருந்து தஞ்சைக்குக் குடிபெயர்ந்த ஸ்ரீநிவாஸராவ் இவ்வாத்யக் கலையில் சிறந்து விளங்கினார். இவரது புதல்வர் ஸகாராமராவும் (செம்மங்குடி மற்றும் கோட்டு வாத்யம் நாராயண ஐயங்கார் ஆகியோரது குரு) இக்கலையில் மிளிர்ந்தார். பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் இதன் வாசிப்பினை எளிமைப்படுத்தினார்.

இவர்களைத் தொடர்ந்து இக் கோட்டு வாத்யக் கலையில் பிரகாசித்த மற்றுமொரு கலைஞர் நாராயண ஐயங்கார். மைசூர் சௌடைய்யா வயலினில் 7 தந்திகளைப் புகுத்தி புரட்சி செய்தது போல் நாராயண ஐயங்காரும் கோட்டு வாத்தியத்தில் தந்திகளை மாற்றி அமைத்து புரட்சி செய்தார். இவரது மகள் வயிற்றுப் பேரன்தான் ‘சித்ரவீணை கணேஷ்’. சித்ரவீணை நரசிம்மனின் சகோதரி மகன். ரவிகிரண் - சசிகிரண், கிரணாவளி இவர்களின் அத்தை மகன் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கணேஷின் தாயார் காயத்ரி அம்மாள் நல்லபாடகி என்பதோடு கோட்டு வாத்யக் கலையிலும் ஆர்வம் மிகக் கொண்டவர். ஆனால், தனக்கான கடமைகளின் நெருக்குதல்களால் அவரால் அக் கலையில் தன்னை மேம்பட்டக் கலைஞராக மெருகேற்றிக் கொள்ள இயலவில்லை. தனக்கு வாய்க்காத பாக்யம் தன் மகனுக்காவது அமையட்டும் என நினைத்தார். கணேஷ் தத்துபித்தென்று நடக்கும் போதே தன் சகோதரர் சித்ரவீணை நரசிம்மனிடம் மகனை ஒப்படைத்து "இவனின் எதிர்காலத்தை சங்கீதத் துறையில் நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் காயத்ரி.

தவிட்டிற்கும் - குலசாமிக்கும் குழந்தைகளை தத்துக் கொடுப்பவர்களை பார்த்தும் - கேட்டும் இருக்கிறோம். ஆனால், கோட்டு வாத்யத்திற்கென தத்தளிக்கப்பட்டவர் கணேஷ் ஒருவராகத்தான் இருக்க முடியும். உடன் உலாவிய சகாக்களான ரவிகிரண், சசிகிரண், கிரணாவளி ஆகியோர் கையில் நோட்டும், பென்சிலுமாக பள்ளிக் கூடங்களுக்குச் சென்று வரும் போது கணேஷிற்கு மட்டும் பள்ளிக் கூடம் என்பது மாமா வீடு. வாத்யார் தாய் மாமா நரசிம்மன், ஒரே சப்ஜெக்ட் கோட்டு வாத்யம்.

காலையில் நரசிம்மன், தான் பணிபுரிந்த AIR போகும் போது அன்றைய நாளிற்கான பயிற்சி அம்சங்களை விலாவாரியாக கணேஷிற்கு விளக்கிவிட்டுப் போவார். அவர் மாலை அலுவலகம் முடிந்து வீடு திரும்பி வருவதற்குள் விலா எலும்புகள் நோக அவற்றை முடித்து வைத்து இருப்பார் கணேஷ். நரசிம்மன் சாரால் கணேஷிற்குத் தரப்பட்ட பயிற்சியின் தன்மையை விவரிக்க கதாகாலேட்சபம் ஒன்றில் பிரசங்கி சொன்ன கதை ஒன்று தான் ஞாபகத்திற்கு வருகிறது.

"இலங்கையில் சிறைவைக்கப்பட்டு இருந்த சீதா தேவியை நேரில் சந்தித்த அனுமனிடம் "சதா சர்வகாலமும் நான் அவர்



கோட்டுவாத்தியம்
நாராயண ஐயங்கார்

(இராமர்) நினைவாகவே இருந்து வருவதால் எங்கே நான் அவராகவே உருமாறி விடுவேனோ என அச்சப்படுகிறேன்" என்றாராம் சீதாதேவி. அதற்கு சொல்லின் செல்வனான அனுமன் "அவ்விதம் நீங்கள் என் தலைவனாக மாறினாலும் கவலை வேண்டாம் தாயே... காரணம், அங்கே என் தலைவனாம் இராமபிரானும் எப்போதும் உங்கள் நினைவாகவே இருப்பதானால் அவர் நீங்களாக உருமாறிவிடக் கூடுமல்லவா?" என்று சொல்லி சீதையின் அச்சம் தவிர்த்தாராம்.

நல்ல வேளை... கோட்டு வாத்யம் அஃறிணையான வாத்யமாக இருந்த காரணத்தால் கணேஷ் தப்பித்தார் என்று தான் சொல்ல வேண்டும். "தினசரி 'சிலபஸை' காலை 10 மணிக்குத் தொடங்கி மாலை நான்கு மணிக்குள் பூர்த்தி செய்தாக வேண்டும். இடையில் உணவிற்காக அரைமணி நேரம் குட்டி ரெஸ்ட். மாலையில் மாமா வந்ததும் சொல்லிச் சென்றதை வாசிக்கச் சொல்வார். நான் உழைத்தது எவ்வளவு நேரம். உழைப்பது போல் OP அடித்தது எவ்வளவு நேரம் என்பதனை என் வாசிப்பை வைத்தே துல்லியமாகக் கண்டுபிடித்துவிடுவார்" என்கிறார் கணேஷ்.

'நந்தனார் சரித்திரம்' கேசட்டைப் போட்டு 'மாஞ்சியில்' 'வருகலாமோ' பாடி வாசிப்பேன். இதற்கான இராகம் என்ன? தாளம் என்னவென்பதெல்லாம் பற்றி ஏதும் எனக்குத் தெரியாது. அப்படியே... அவற்றைச் சொல்லிக் கொடுத்தாலும் அதனை உள்வாங்கிப் பத்திரப்படுத்தும்

பக்குவம் அந்த பால்ய வயதில் எனக்கிருக்க வாய்ப்பில்லைதான்.

எப்படி ஒரு மொழியில் பேசவும், எழுதவும் தெரிந்துகொண்ட பின் அம்மொழிக்கான இலக்கணத்தை அறிந்துகொள்கிறோமோ அதுபோலத்தான் எனக்கான சங்கீத பாலபாடமும் நடந்தது. எனக்குத் தரப்பட்டது சங்கீத போதனை அல்ல; இரத்தத்தில் - நாடி நரம்புகளில் மெல்ல மெல்ல ஏறும் குளுக்கோசும் அல்ல. உடல் ஜீனில் உறையும் 'ஸ்டீராய்டு' போல இசை போதிக்கப்பட்டது என்பதே பொருத்தமாக இருக்கும். எனக்கான குரு மாமாவாக இருந்த காரணத்தால் வாசிப்பு நுட்பங்களை, நீக்குப் போக்குகளை ஒளிவுமறைவின்றி சொல்லிக் கொடுத்தார். கோட்டுவாத்யத் தந்திகளை எப்படி மீட்ட வேண்டும், கட்டைகளை எவ்விதம் பராமரிப்பது, கையாள்வது என்பது குறித் தெல்லாம் சூட்சுமங்களை தெளிவுபடுத்துவார்.

இந்த கொடுப்பினையின் - பாக்யத்தின்விளைவு, நான் எனது 2 1/2 வயதிலேயே ஒரு வித்வானுக்குரிய அடிப்படை யோக்கியாதாம்சங்களை கொண்டவனாக உருவாக்கப்பட்டேன். ஒரு வகைப் பூச்சி இருக்கிறதாம். அது தன் இன விருத்தியை செய்யும் விதம் ரொம்ப அலாதியானது. அப் பூச்சி தன் வசம் அகப்படும் ஏதாவது ஒரு புழுவினை தன் கூட்டிற்குள் கொண்டு வந்து பத்திரமாக வைத்துவிடுமாம். கூட்டுக்குள் வந்து போகும்போதெல்லாம் பூச்சியானது அப் புழுவினை பாசத்தோடு ஒரு கொட்டு கொட்டிவிட்டுப் போகுமாம். பூச்சி வருமே நம்மை கொட்டுமே என்கிற தொடர் அச்சமும், பூச்சியின் உமிழ் நீரிலுள்ள ஜெனிடிக் அம்சங்களும் சேர்ந்து அப் புழுவானது குறிப்பிட்ட நாட்களில் பராமரித்த பூச்சியின் வாரிசாக ஆகி கூட்டிலிருந்து வெளியேறுமாம். ஒரு வகையில் எனக்கும் இது பொருந்தும் என்றே கருதுகிறேன்.

நான் இசையினை கற்றேன் என்பதனை விட அதனுடன் வாழவைக்கப்பட்டேன் வாழ்ந்தேன். இப்போதும் வாழ்ந்து வருகிறேன் என்பதே சரியாக இருக்கும்.

நான் ராகம் பாட ஆரம்பித்த 2 1/2 வயதில் கிரணாவளிக்கு 5 வயது இருக்கும். என்னுடைய பால்ய பருவத்திலிருந்தே கிரணாவளியுடன் சேர்ந்து பாடி வந்தேன். 8 வயதிலிருந்து சித்ரவீணை கச்சேரி வழங்க ஆரம்பித்தேன். அரங்கேற்றம் எல்லாம் கிடையாது. நேரடியாக கச்சேரி மேடைதான். என் மாமாவிற்கு சற்றும் குறையாத வகையில் என்னை சங்கீத உலகத்திற்கு கைபிடித்து அழைத்து வந்ததில் சித்ரவீணை ரவிகிரண் அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. தினமும் மாலை வேளையில் இரண்டு மணிநேர அளவிற்கு என்னையும், கிரணாவளியையும் பாடச்சொல்லி அவர் சித்ரவீணைக் கொண்டு சொல்லிக் கொடுப்பார். இதுமட்டுமின்றி அவருடைய எண்ணற்ற கச்சேரிகளில் தம்புராவும், தாளமும் போட்டு வந்த காரணத்தால் பல்வேறு இசை நுட்பங்களை என்னால் எளிதாக அறிய முடிந்தது.


சித்ரவீணை நரசிம்மன்

ASIA BROTHERS என்ற பெயரில் நானும், ரவிகிரணும் இணைந்து சித்ரவீணை வாசித்தோம். நிறைய Solo கச்சேரிகளும் வாசித்துக் கொண்டிருக்கிறேன். இப்படி ஆரம்பக்காலங்களில் நான் என் குடும்பத்தவருடனேயே நிகழ்ச்சிகளை வழங்கி வந்ததால் எனக்கான கலை உலக அறிமுகமும், அனுபவமும் மிக சுலபமாக அமைந்தது.

நான் மங்களம் பள்ளி பாலமுரளி சாருடைய ஸ்டைலை நிறைய ஃபாலோ

செய்வேன். என்னுள் பாதிப்பினை ஏற்படுத்திய இசை ஜாம்பவான்களுள் அவரும் ஒருவர். எனக்கு நிறைய சங்கீதச் சூட்சுமங்களை சொல்லித் தந்துள்ளார். அவரும் பால பருவத்திலிருந்து சங்கீத மேடைகளை ஆக்ரமித்து வந்தவர் என்பதாலோ என்னவோ என்மீது அவருக்கு தனிப்பட்ட பாசப் பிணைப்பு இருந்தது. தனது சிறப்புக் கச்சேரிகள் மற்றும் வெளிமாநிலக் கச்சேரிகளுக்கு எல்லாம் என்னை உடன் அழைத்துச் சென்றுள்ளார். அந்தவகையில் போபால், குவாலியர் போன்ற பெரு நகரங்களில் எனது சிறு வயதிலேயே அவருக்கு வாசித்து இருக்கிறேன்.


பாலகர்களாக ரவிகிரண், சசிகிரண், கிரணாவளி மற்றும் கட்டுரையின் கதாநாயகன் கணேஷ்

மகாவித்வானான சேதலபதி பாலசுப்ரமணியம் அவர்கள் ஒரு கச்சேரிக்கு தனக்கு சித்ரவீணை வாசிக்கும்படி என்னிடம் கேட்டு இருந்தார். சில காரணங்களால் அந்த நல்வாய்ப்பு கைகூடாமல் போய்விட்டது என்பது எனக்கு வாழ்நாள் வருத்தம்.

AIR-ல் TOP GRADE-னை நான் என் 24 வயதிலேயே பெற்றேன் எனில் அதற்கான முழு ‘கிரெடிட்டும்’ என் மாமாவையும், ரவிகிரணையுமே சாரும்.

2004-ம் வருடம் மே மாதம், சென்னை, தியாகராய நகரில் உள்ள SRUTHI TOWER-ல் NON-STOP-ஆக 32 1/2 மணி நேரத்திற்கு சித்ரவீணையில் இடைவிடாது வாசித்தேன். அது அக்னி நட்சத்திர காலகட்டம். இருப்பினும் ரசிகர்கள் தொடர்ந்து உற்சாகம் தந்தபடி இருந்ததால் தயாரிப்பு - திட்டமிடல் எல்லாமும் கைமீறிப்போய் மனதிற்கு தோன்றியதை அடுத்தடுத்து வாசித்தேன். இதேபோல்; இதே அரங்கில் 2006-லும் 24 மணிரே NON-STOP நிகழ்ச்சியினை தந்தது மீடியாக்களால் பெரும் சாதனையாக அன்றைக்குவர்ணிக்கப்பட்டது.

சில இராகங்களை நானே உருவாக்கினேன். அதில் ஒன்று ‘ஏகாந்தம்’. ஒரேயொரு ஸ்வரம் மட்டுமே கொண்டது. ஸப்தஸ்வரங்களில் 5 ஸ்வரங்கள் மட்டுமே கொண்டும் அதன்பின்னர் 4 மற்றும் 3 ஸ்வரங்கள் வரையிலான இராகங்களை மங்களம்பள்ளி பாலமுரளி சார் செய்து இருந்தார். நான் அதிலேயும் குறைத்து ஒரேயொரு ஸ்வரத்திலான இராகத்தினை அமைத்து உள்ளேன். பல மேடைகளில் இதனை அரங்கேற்றி இருக்கிறேன். அது ‘பரமபாவனி... பாப மோசனி’ என்கிற காஞ்சி காமாட்சி மீதான கீர்த்தனை.

எனது கச்சேரிகளில் புதுப்புது கீர்த்தனைகள் நிறைய இடம் பெறும். கீர்த்தனைகளை வடிவமைப்பதிலும் எனக்கு ஆர்வம் அதிகம். ஸ்ரீ ராகவேந்திரர் எனது இஷ்ட தெய்வம். அவர் மீது எனக்கு அலாதியான பக்தி உண்டு. அடிக்கடி மந்த்ராலயம் சென்றுவரும் வழக்கம் உள்ளவன். இந்த ஈடுபாட்டால் ஸ்ரீ ராகவேந்திரர் மீது ஐந்தாறு கீர்த்தனைகளைச் செய்து உள்ளேன்.

அபூர்வ இராகமான ‘துஷாவந்தி’-யில் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவர் மீதும் ஒரு இனிய பாடலை கம்போஸ் செய்து இருக்கிறேன். இதற்கு உலகம் முழுவதும் உள்ள முருக பக்தர்களிடையே புளகாங்கிதத்துடன் கூடிய வரவேற்பு கிடைத்து வருகிறது. சில திறமையாளர்களின் பாடல் வரிகளுக்கு

மா மேதை பிருந்தா அம்மா அவர்கள் மாமா நரசிம்மன் இல்லத்தில் சில காலம் தங்கி இருந்தார்கள். ரவிகிரண் உட்பட நாங்கள் எல்லோரும் அம்மாவிடம் அப்போது கற்றுக் கொண்டோம். மற்றவர்களது சங்கீதத்தினை கேட்க சங்கீத ரசனை மட்டும் இருந்தால் போதும். பிருந்தா அம்மாவினுடைய சங்கீதத்தைக் கேட்க அது மட்டும் போதாது கேட்பவனுக்கு மேம்பட்ட சங்கீத ஞானமும் வேண்டி இருக்கும். அப்படியான பாட்டு அம்மாவினுடையது. சுமாரான சங்கீத அறிவைக் கொண்டு எல்லாம் அவரின் பாடாந்தரத்தை எடைபோட்டு விட முடியாது. சங்கீதத்தில் எந்தவித சமரசமும் செய்து கொள்ளாதவர் அவர்.



சங்கீத உலகில் முதன் நிலை வகிக்கும் சென்னை, மியூசிக் அகாடமி நிர்வாகத்தினர் சீசனில் கச்சேரிக்கு தேதி கேட்டு பிருந்தா அம்மாவை அணுகுவார்கள். கூப்பிட மாட்டார்களா என எத்தனை எத்தனையோ முன்னணிக் கலைஞர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் காத்திருக்க... பிருந்தா அம்மாவோ மிக எதார்த்தமாக “போன வருஷம்தானய்யா... பாடினேன் அதற்குள்ளேவா? ஒரு ரெண்டு வருஷம் போவட்டும் பார்க்கலாம்....” என்பார். அகாடமிக்கே இதுதான் அவரது பதில்.

ஒரு சபையிலே நாதஸ்வரக் கச்சேரிக்குப் பிறகு வேறு எந்தக் கச்சேரியை நடத்தினாலும் அது அவ்வளவாக சோபிக்காது. அந்த ராஜ

இசையமைத்து அவற்றையும் எனது கச்சேரிகளில் பாடிவருகிறேன்.

தைவான் நாட்டில், பிரேசிலில் ஓர் அருமையான சித்ரவீணா நிகழ்ச்சி நடத்தினேன். அந்நாட்டவர் மெய்மறந்து ரசித்தனர். அந்த நாட்டிற்கு வந்துள்ள முதல் கர்நாடக இசைக் கலைஞன் நான்தான் என அந்நாட்டு ஊடகங்கள் பாராட்டின.

2019 முதல் எனது தாயாரின் நினைவினைப் போற்றும் வகையில் அவரது பெயரில் ‘காயத்ரி ஃபைன் ஆர்ட்ஸ்’ என்கிற கலை மேம்பாட்டு அமைப்பினை சென்னையிலும், ‘காயத்ரி ஃபைன் ஆர்ட்ஸ் குளோபல்’ எனும் பெயரில் அமெரிக்காவிலுமாக பவுண்டராக இருந்து



மாமன் மடியில் பயிற்சி

செம்மையாக நடத்தி வருகிறேன். 1920-21 முதல் ஆண்டு தோறும் டிசம்பரில் ஆறு நாட்கள் இசைத் தொடர் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். அமெரிக்காவில் இதனை ஒரேநாள் நிகழ்வாக நினைவில் நிற்கத்தக்க வகையில் அரங்கேற்றி வருகிறோம். அங்கே இவ்வமைப்பின் இயக்குநராக ஸ்ரீமதி. வித்யா வெங்கடேஷ் அவர்கள் மெச்சத்தக்க வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். இவரது மகன் வைபவ்ராமு ஒரு மருத்துவமாணவர். என்னிடம் பாட்டுக்கற்று வரும் எனது பிரதான சீடனும் கூட.

‘காயத்ரி ஃபைன் ஆர்ட்ஸ்’ ஏதோ பெயரளவிற்கான ஒரு அமைப்பாக அமைந்துவிடக்கூடாது என்பதில் நான் சற்று கவனமாகவே இருந்து

வாத்யத்தோட கம்பீரம் அப்படி. அதே போலத்தான் பிருந்தா அம்மாவினுடைய பாட்டும். அம்மாவுடைய பாட்ட கேட்டுபுட்டு வேறு யாருடைய பாட்டைக் கேட்டாலும் ஏதோ ஒன்று கொறையறது போலவே தோணும். அப்படி என்ன அவர் பாட்டுலனு கேட்டா ருசியினை உணரத்தான் முடியும். வௌக்கமெல்லாம் தர முடியாது.

சங்கீதப் பிதாமகர் என போற்றப்பட்ட செம்மங்குடியாரே அம்மா முன்பு தரை யிலே அமர்ந்துதான் கற்றுக் கொண்டாராம். 84 வயதிலும் அப்படியொரு ஸ்ருதி சுத்தம். கலைவாணி கடாட்ஷம் பெற்றவங்கன்னு அம்மா பாடுற பாட்டே சொல்லிடும்.

ஆனா... ரொம்ப கண்டிப்பானவங்க. 6 மணிக்கு கிளாஸ் என்றால் 6.03க்கு போனாலும் ஏற இறங்க கவனிப்பார். அப்பார்வை "என்ன... சங்கீதம்னா அலட்சியமா" என்கிற கேள்வியை நம் மீது வீசும். எனக்கு 15, 16 வயது இருக்கும். எனது AIR கச்சேரியையும் அவர் கேட்டார். அம்மாவிற்கும் நான் வாசித்து இருக்கிறேன். எனக்கு நிறைய வாசி என ஆசிர்வதித்தார்.

என் பாட்டு பிருந்தா அம்மாவிற்குப் பிடிக்கும். "உனக்கு சாரீரம் பேஷா இருக்குடா குழந்தை. நீ தொடர்ந்து பாடுறதிலேயும் கவனம் எடுத்துக்கோ" என்றும் அறிவுறுத்தினார். இப்படி எல்லாம் அவர் யாரையும் எளிதில் பாராட்டி விடக்கூடியவர் அல்ல. வசிஷ்டர் வாயால் கிடைத்த அந்தப் பாராட்டு என் முன்னோர் செய்த பாக்யம் அன்றி வேறென்ன...!

உலகின் முன்னணி கலை அமைப்புகளிடம் நான் வாங்கிய; வாங்க இருக்கும் விருதுகளையும்- பட்டங்களையும் தராசின் ஒரு தட்டில் வைத்து; நான் பிருந்தா அம்மாவிடம் சிட்ஷை பெற்றவன் என்கிற தகுதியினை மறுதட்டில் வைத்தால் இந்தத் தட்டுதான் எடை மிகுதியாக இருக்கும். ●

வருகிறேன். ஆண்டுதோறும் மூத்த வித்வான்களைக் கொண்டு ரசிகர்களுக்கு மன நிறைவான இசை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறோம்.

முன்னணி சங்கீதக் கலைஞர்களுக்கு 'சம்பிரதாய சங்கீத விஷாரதா', பிரபல மிருதங்க வித்வான்களுக்கு 'ஆச்சார்ய விஷாரதா,' கலை வளர்க்கும் சபா செயலாளர்களுக்கு 'ஸங்கீத கலா சேவா விஷாரதா' ஆகிய பெருமைக்குரிய பட்டங்களை வழங்கிக் கௌரவித்து வருகிறோம்.

இவர்களைத் தவிர கலை அமைப்புகளால் பெரிதும் கண்டு கொள்ளப்படாத அஸ்திவாரங்களாய் விளங்கிடும் தம்புரா ஆர்ட்டிஸ்ட்கள், இசைக் கருவிகளைப் பழுது நீக்கித் தரும் தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோரையும் தொடர்ந்து கௌரவித்து வருகிறோம்.

உலகப் புகழ்பெற்ற கிளீவ்லேண்ட் தியாகராஜா ஆராதனா விழாவில் கடந்த 1997-லிருந்து சித்ரவீணா கச்சேரி தந்து வருகிறேன். இதில் 'காயத்ரி ஃபைன் ஆர்ட்ஸ் சார்பில் THEMATIC PRESENTATION தந்து அது தொடர்பான GROUP DISCUSSION-ம் நடந்தேறும்.

2024-ல் 'பக்தி விஜயம்' என்கிற தலைப்பில் பக்திப் பாட்டுகளும், உருப்படிகளும் உள்ளடங்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. கடந்த வருடம் இரண்டாவது 'பக்தி விஜயம்'. இராமர் மீது அமிர்த வர்ஷிணியில் ஒரு உருப்படியினை தயார் செய்தோம். அமெரிக்காவின் 108 பகுதிகளிலும் உள்ள இசை ஆர்வலர்களை ஆன்லைனில் தொடர்பு கொண்டு அவர்களுக்கு சரியான வகையில் பயிற்சிக் கொடுத்து அத்தனை பேரையும் இந்த இரண்டாவது பக்தி விஜயத்தில் பங்கேற்கச் செய்தோம்.

இந்த நிகழ்ச்சியினை நேரிலும், ஊடக வாயிலாகவும் கண்டும், கேட்டும் ரசித்தவர்கள் தந்தப் பாராட்டுகள் பிரமிக்கத் தக்க வகையில் அமைந்தது. எங்களின் கடின உழைப்பிற்கு அந்த சங்கீதச் சாகரம் தியாகராஜ சுவாமிகளும், அவர் போற்றிய இராமபிரானும் எங்களுக்குத் தந்த அங்கீகாரமாகவே இதனைக் கருதுகிறோம்.

இசையில் நான் ரெட்டைக் குதிரையில்




சவாரி செய்பவன் என்கிறீர்கள். வாஸ்தவம்தான். ஒன்று பாட்டு, மற்றொன்று சித்ரவீணை. இரண்டில் எதற்கு முன்னுரிமை என்றால் அதற்கான பதிலை பூசிமெழுகாமல் பட்டவர்த் தனமாக என்னால் தரமுடியும். பாட்டு என்பது வாழும் வாழ்க்கைக்கு... சித்ரவீணை என்பதோ என் ஆன்மாவோடு ஐக்கியப்பட்டு இதயமும் - இதயத் துடிப்பும் போல சதாநேரமும் என்னோடு சல்லாபித்துக் கொண்டிருப்பது. இப்போது புரிந்து இருக்குமே...!

துவக்கத்தில் ஒரு சித்ரவீணைக் கலைஞராக இருந்த நான் சசிகிரண் அவர்களால் ஈர்க்கப்பட்டு ‘கர்னாடிகா பிரதர்ஸ்’ என்ற பெயருடன் வாய்ப்பாட்டுக் கலைஞராக 20 வருடங்களுக்கு மேல் பயணித்து வருகிறேன். எனக்கு இந்த நல் வாய்ப்பினை அளித்த பெருமை முழுதும் சசிகிரண் அவர்களையே சேரும். கச்சேரிகளில் என்னை மிகவும் ஊக்கப் படுத்தி, உற்சாகப்படுத்தி பாடச் செய்வார்.

பலரும் நடுத்தர வயதிலும், முதுமையிலும் பெறுகிற பல விருதுகளை நான் பால்ய வயதிலும், மாணவப் பருவத்திலும் பெற்றுவிட்டேன். இளம் வயதில் அரசு ஊழியனாக ஆகிறவனுக்கு நடுத்தர வயதிலேயே உயர் பதவி வாய்ப்பது போன்று எனக்கு எல்லாமும் கிடைத்தது. பாரத் கலாசாரின் ‘யுவகால பாரதி’, தமிழக அரசு கலை பண்பாட்டுத் துறையின் ‘கலைச் சுடர் மணி’, பெங்களூரில் ‘கர்நாடக கான கலா பரிஷத்’, ‘கான கலா விபன்ஸி’, கிளீவ்லேண்ட் பைரவி ஃபைன் ஆர்ட்ஸ் சார்பில் ‘ஸங்கீத கலா ஸாகரா’ உள்ளிட்ட ஏராளமான விருதுகளும், பட்டங்களும் பெற்றுள்ளேன்.

என்னிடம் இசைப் பயிற்சி பெற உலகம் முழுவதும் இருந்து இளைஞர்கள் பலர் தொடர்பு கொண்டு வருகின்றனர். எனக்கு மாணாக்கர்களின் எண்ணிக்கையிலோ, வருமானத்திலோ ஆர்வம் கிடையாது. பத்தே பத்து பேராக இருந்தாலும் சங்கீதத்தில் ஆர்வமும், தன் முனைப்பும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன். எனக்குத் தரப்பட்ட பயிற்சியின் தரத்தில் தானே என்னால் மற்றவர்களுக்குத் தரமுடியும். அவற்றை உள்வாங்கி வெளிப் படுத்துகிற பாங்கு என் அளவிற்கு இல்லா விடினும் ஓரளவிற்காவது இருந்தால் தான் இரு தரப்பிற்குமே உபயோகமாக இருக்கும்.

ஏதோ மாணவர்களாக வந்தார்கள். நாமும் சொல்லிக் கொடுத்தோம். அவர்களும் கேட்டுக் கொண்டார்கள் என்றெல்லாம் காலம் கடத்துவது இல்லை. பயிற்சிக்குப் பின் அவர்களுக்கான மேடை வாய்ப்புகளையும் எங்களது காயத்ரி ஃபைன் ஆர்ட்ஸ் மூலம் உருவாக்கித் தருகிற பொறுப்பினையும் ஏற்கிறோம். எனது யு.எஸ்.ஏ. மாணவன் ஆதித்யா ரவிக்கு மிகச் சிறப்பான வகையில் அரங்கேற்றம் நடத்தினோம். லண்டனிலிருந்து விஸ்வநாதன் என்கிற 55 வயது ‘இளைஞர்’ Online மூலம் இசைப்பயிற்சி எடுத்து வருகிறார். அவரிடம் வெளிப்படும் உற்சாகமும், ஆர்வமும் என்னால் அவரை இளைஞராகத்தான் கருத முடிகிறது.

ஒரு குருவாக - ஆசிரியராக நிறைய இளம் கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்பது என் அடி மனது ஆசை. மேலும், காயத்ரி ஃபைன் ஆர்ட்ஸ் சார்பில் சென்னையில் சகல வசதிகளும் கொண்ட ஒரு தாராளமான இசை அரங்கினை உருவாக்க வேண்டும் என்பதும் மற்றொரு ஆசை என்கிறார் கணேஷ். அவரது ஆசைகள் நிறைவேற ஸரிகமபதநி வாழ்த்துகிறது.

**சந்திப்பு:- இராம.பாஸ்கர்.**

# தும்புரீயம் இயற்றிய தும்புரு!



"ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாராக இல்லை" என்றார் ஜெர்மானிய வேதாந்தி நீட்ஸ். நம் தென்னாட்டில் ஆடத் தெரிந்த கடவுள் மட்டுமல்ல; நாட்டியத்தையே தோற்றுவித்த கடவுளான ஆடலரசன் நடராஜர் ஒரு அற்புதமே.

சிவபெருமான் லீலைகளுள் பதினைந்தாவது 'சந்தியா நிருத்த மூர்த்தியாகும்.

விமவான பொற்கொடியை வைத்தே
சங்கரன் சூலஞ் சுழற்றி
நடித்தனனோர் யாமம்

என்ற ஆகமத் திரட்டின்படி சிவபிரான் மலையரசன் புத்திரியாகிய உமையை நிறுத்தி, சூலஞ்சுழற்றி, தமருகமேந்தி நிருத்தம் செய்தனன். இதனைப் 'பிரதோஷம்' என்பார்கள்.

இந்த நிருத்தத்தில் தேவர்கள் அனைவருமே பங்கேற்றனர். திருமால் மிருதங்கம் வாசிக்க, நந்திதேவர் உடுக்கை இசைக்க, அரம்பை ஆட, நாரதர், தும்புரு ஆகியோர் வீணை மீட்ட சிவ நடனம் நிகழ்ந்தது என்கிறது புராணம்.

இவர்களுள் திருமால், நாரதர், நந்தி, அரம்பை பற்றி நமக்குத் தெரியும். ஆனால் யார் இந்த தும்புரு?



தும்புரு விமலன் என்பவரின் குமாரன். இசையில் வல்லவன். ஒருமுறை இந்திரனைப் புகழ்ந்து பாடிவிட அதுகேட்ட நாரதர் சபித்து விட்டார்.

பூமியில் வேங்கடத்தில் ஒரு பொய்கையில் தும்புரு தள்ளப்பட்டுவிட அதன் கரையிலேயே அமர்ந்து தவமியற்றி சாபவிமோசனம் பெற்று மீண்டும் கந்தர்வர் ஆனார். இது புராணம். தும்புருவின் சிற்பம் எங்குள்ளது தெரியுமா?

சென்னை, மல்லிகேசுவரர் ஆலயத்து முகமண்டபத் தூணில் அவரைக் காணலாம். குதிரை முகத்தோடு, கையில் வீணை ஏந்திய கோலத்தில் காட்சி தருகிறார்.

இவர் இயற்றிய 'தும்புரீயம்' என்கிற இசைநூல் மறைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

**ரா.நந்து, திருக்களம்பூர்**

# வள்ளலாரின் இசைப்புலமை



வள்ளலாரின் திருவருட்பா பாடல்கள் அனைத்துமே இசையுடன் இசைக்க வல்லவை. இருப்பினும், அவரே தம் பாடல்களில் கண்ணிகள், கீர்த்தனைகள், நாமாவளிகள் எனத் தலைப்பிட்டு அமைத்துள்ளார். அப்பாடல்களே இங்கே கவனத்தில் கொள்ளப்பட்டு உள்ளன. வள்ளலாரின் திருவருட்பா பாடல்களில் இராகம், தாளம் கொண்டு பாடப்பெற்றப் பாடல்கள் அவரது இசைப்புலமையினை வெளிப்படுத்துகின்றன.

வள்ளலார் ஏறத்தாழ முப்பது இராகங்களைக் கையாண்டு பாடியுள்ளார். இந்த இராகங்கள் அனைத்தும் கர்நாடக இசை ராகங்களே. அதிலும், பரவலாகப் பாடப்படும் ராகங்களே கையாளப்பட்டு உள்ளன.



கல்யாணி, தோடி, மோகனம், சங்கராபரணம், அடாணா, காம்போதி, ஆனந்த பைரவி, பைரவி, கமாஸ், சிந்து பைரவி, தர்பார், தன்யாசி, எதுகுலகாம்போதி, பந்துவராளி, நீலாம்பரி, புன்னாகவராளி செஞ்சுருட்டி, தீரசங்கராபரணம், பியாகடை, காஃபி, நாதநாமக்கிரியை, உசேனி, சஹானா, கருடத்வனி, வசந்தா முதலான இராகங்களையும், எண் வகைத் தாளங்களையும் கொண்டுப் பாடியுள்ளார்.

சிற்றிலக்கிய வகை உறுப்புகளுள் ஒன்றானது 'சிந்து' எனப்படும். அதாவது; முதலடி முச்சீரும், தனிச்சீர் ஒன்றும் பெற்று இரண்டாமடி நீண்டு வருவது முச்சீருடையது. சிந்தடியாகலின் இம்மாலை 'சிந்து' எனப்படும். அடி இரண்டிரண்டாகத் தொடுக்கப்படுவது 'கண்ணி.' கண்ணி என்பது மாலையில் ஒவ்வொரு பக்கத்தும் ஒன்றும் இரண்டுமாக வைத்துக் கட்டும் பூமாலையின் தொகுப்பு. பல கண்ணிகளை உடையது ஒரு மாலையாகும். அதுபோல, இச் சொல் மாலையும் கண்ணி எனப்படுகிறது. மகுடமாக வரும் சொல்லும் - பொருளும் கொண்டு கண்ணியின் பெயரானது அமையும்.

இத்தகு தன்மையுடைய கண்ணிகளைப் பதினெட்டுத் தலைப்புகளின் கீழ் வள்ளலார் பாடியுள்ளார். இக் கண்ணிகளில் பதினான்கு இராகங்களும், ஆறு தாளங்களும் விரவி வந்துள்ளன. கண்ணிகளில் ஒரே சொல்லை இரு முறை குறிப்பிட்டு பாடியுள்ளமை அப்பாடல்கள் இறைவனைப் போற்றும் முகத்தான் உணர்ச்சி மேலீட்டால் வந்தவை. இருப்பினும் இசை நயம் சுவை மிக்கதாக உள்ளன. சான்றாக...

சிவசிவ சிவசிவ ஜோதி - சிவ

சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி

சிவசிவ சிவசிவ ஜோதி

என்ற சிவசிவ ஜோதியின் பல்லவியினைக் கூறலாம். வருகைக் கண்ணியில், காம்போதி இராகத்தில் இறுதிச்சீர் 'வாரீர்' என்றும் வேட்கைக் கண்ணியில், ஆனந்த பைரவி இராகத்தில் 'அணைய வாரீர்' என்றும், ஆடலமுதக் கண்ணியில், மோகன இராகத்தில் 'ஆடவாரீர்' என்றும் அமைத்துள்ளமை இசை நயம் உடையது. வருகைக் கண்ணியில் அகரம் முதல் ஔகாரம் வரை பன்னிரு எழுத்துக்களையும் கொண்டு கண்ணிகளை அமைத்தமை அவரின் இசைப் புலமையையும், தமிழ்ப் புலமையையும் ஒருசேர காட்டுகிறது. 'வெண்ணிலாக் கண்ணியினைப் புன்னாகவராளி இராகத்தில்

தன்னையறிந் தின்பமுற
வெண்ணிலா வே - ஒரு

தந்திரநீ சொல்ல வேண்டும்
வெண்ணிலாவே

என்று பாடியமைஅறியத்தக்கது. திருவருள் முறையீட்டுக் கண்ணியும், பேரன்புக் கண்ணியும் பந்துவராளி இராகத்தில் உள்ளது. பந்துவராளியினைக் 'காம வர்த்தனி' என்றும் கூறுவர். ஆனந்த மேலீட்டில், 'ஆடேடி பந்து' என்று இறுதிச்சீர் அமைத்து ஒவ்வொரு களிப்பினையும்


வடலூர் ஜோதி தரிசனம்

கமாஸ், சங்கராபரணம், (ஆங்கில மெட்டு), நாதநாமக்ரியை, இந்துஸ்தானி என பல் வகையான இராகங்களையும் கொண்டு அமைத்துள்ளமை வள்ளல் பெருமானது இசை அறிவினை மெச்சும்படிச் செய்கிறது.

'பாங்கிமார் கண்ணி'-யில் பாங்கியர்க்கான அறிவுறுத்தலில் ஆனந்த பைரவி இராகத்தில் 'பாங்கிமாரே' என்று இறுதிச்சீர் அமைத்துப் பாடியுள்ளமை இசை நயம் கொண்டது. இதில் அகரம் முதல் ஊகாரம் வரை (6 எழுத்துக்கள்) முதலெழுத்தாகப் பயன்படுத்திப் பாடியுள்ளார். தொடர்ந்து 'க' கரத்தில் 6 கண்ணியும், 'கா'- எழுத்தில் தொடங்கி 3 கண்ணியும், 'கி'- எழுத்தில் தொடங்கி 3 கண்ணியும், 'கீ' - எழுத்தில் தொடங்கி 3 கண்ணியும், 'கு'- எழுத்தில் தொடங்கி 3 கண்ணியும், 'கூ' எழுத்தில் தொடங்கி 3 கண்ணியும் என அமைந்தமை வள்ளல் பெருமானது அளவீட்டு அறிவையும், யாப்பறிவையும் புலப்படுத்துகிறது.

'திருவடிக்' கண்ணியில், நீலாம்பரி இராகத்தில் இறுதிச் சீர் "நோவாதா' என்று அமைத்துப் பாடியமை இராக விரிவிற்கு உதவுவதுடன் பாடலின் கருத்தும் அழுத்தமுறுகிறது. தாலாட்டிற்குரிய இராகமாகக் கருதப்படும் அப்பாடலின் கண்ணி.

'மின்னிடையாள் காண விளங்குமன்றி லாடுகின்றாய்

என்னுடையா யுன்றன் இணையடிதான்
நோவாதா’ (1)

என்பதாகும். பழந்தமிழிசையில் நீலாம்பரி இராகம் ‘மேகராகக் குறிஞ்சி’ என்று போற்றப்படுகிறது.

பல்லவி, அனுபல்லவி, சரணம் பெற்று இசைத்துப்பாடும் இயல்புள்ளவை அனைத்தும் கீர்த்தனைகள்தாம். பல்லவம் என்பது தளிர். மலர்ச் செடியின் தலையில் தோன்றும் தளிர்போல முன்னுற எடுத்துப்பாடும் பகுதி ‘பல்லவி’. பாட்டின் முதல் எடுப்பானது பல்லவியாகியது.

தலைத்தளிரின் கீழ் இருக்கும் தளிர் ‘அனுபல்லவி’ இதற்குப் பின் வருவன சரணங்களாகும். கர்நாடக இசையில், பல்லவி, அனுபல்லவி, சரணம் என வகுத்துப் பாடினர். இத்தகு பிரிவில் வள்ளலாரும் கீர்த்தனைகளை அமைத்துள்ளார். இந்த அளவுகோலின்படி தோடி இராகத்தில் அமைந்த அவரின் நடேசர் கீர்த்தனை

“தெண்டனிட்டே னென்று சொல்லடி -
சுவாமிக்கு நான்

தொண்டனிட்டே னென்று சொல்லடி.

என்பதாகும். இக் கீர்த்தனையானது இசைக்கப் பெறாத தமிழிசை விழா இல்லை எனலாம். கல்யாணி ராகத்தில் ‘இது நல்ல தருணம் அருள் செய்ய’ என்ற பாடலும், உசேனி இராகத்தில் அமைந்த ‘என்ன புண்ணியம் செய்தேனோ அம்மா நான்’ என்ற பாடலும், பியாகடை இராகத்தில் அமைந்த ‘வருவார் அழைத்து வாடி’ என்ற பாடலும் தமிழிசையில் முத்திரைப் பதிக்கும் பாடல்களாகும்.

அனுபல்லவி இன்றி பல்லவி, சரணம் மட்டும் கொண்டு பாடப்பெற்ற கீர்த்தனைகளும் உள்ளன. அவை நடேசர் கீர்த்தனையான ‘இன்னந் தயவு வரவிலையா’ என்ற பாடல் காம்போதியிலும், ‘ஆடியபாதம்’ தன்யாசியிலும், ‘அபயம் அபயம்’ தோடியிலும், ‘அற்புதம் அற்புதமே அருள்’ என்ற பாடல் தர்பாரிலும், ‘காட்சிக் கண்ணி’ எதுகுலகாம்போதியிலும், ‘ஆனந்த மேலீடு’ சஹானாவிலும் அமையப் பெற்றுள்ளன.

‘என்ன புண்ணியம் செய்தேனோ’ என்ற பாடலில் நாதம் பலவற்றைக் கூறியுள்ளார். சின்ன நாதம்,எக்காள நாதம், இணையில் நாதம், தெருவில் நாதம், நாடி நாதம், ஓங்கார நாதம், வேணு நாதம், வலிய நாதம் என மங்கல வகைகளைக் கூறுகிறார் வள்ளல் பெருமான்.



இறைவன் பெயரினைப் பலமுறை உச்சரித்தலை ‘நாமாவளி’ என்கிறோம். நாமாவளிகளைப் பதினான்கு தலைப்புகளில், பதினோறு இராகங்களையும், மூன்று வகை தாளங்களையும் பயன்படுத்திப் பாடியுள்ளார். இதில் கர்நாடக இசை இராகங்களையும், ஆங்கில மெட்டுடன் சங்கராபரணம் இராகத்தையும் இணைத்துப் பாடி உள்ளார். அப்பாடல்கள், ‘போகம் சுகபோகமும்’, ‘சூது மன்னுமிந்தையே’ என்பன.

கர்நாடக இசை மற்றும் ஆங்கில மெட்டு இசை தவிரவும் இந்துஸ்தானி பியாக் (பொது நிலையருள்வது), இந்துஸ்தானி (நீடியவேதம்), இந்துஸ்தானி தோடி (வேத சிகாமணியே) என இந்துஸ்தானி இசை இராகங்களைக் கொண்டும் பாடல்களைப் பாடியுள்ளார். நாமாவளியில்

# தொடவைத்த பாடல்


ஜி.என்.பி.

**மை**சூர் தர்பாரில் மகாராஜா முன்னிலையில் ஜி.என்.பி. பாட வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தார் சமஸ்தானத்தின் அப்போதைய ஆஸ்தான வித்வானாகிய முத்தையா பாகவதர்.

அக் கச்சேரியில் கமாஸ் ராகத்தில் 'ப்ரோசேவா ரெவருரா' கிருதியை ஜி.என்.பி. பாடக்கேட்ட அக் கீர்த்தனையின் கர்த்தாவான மைசூர் வாசுதேவாச்சார் சபையிலேயே உரத்த குரலில் "இத்தனை அழகான பாட்டை நானா செய்தேன்?" என்று வியப்பு தெரிவித்தாராம்.

ஜி.என்.பி.யின் ஷண்முகப்பிரியா, மோகனராகக் கீர்த்தனைகளை அடுத்தடுத்துக் கேட்டு ஆனந்தித்த மகாராஜா ஜி.என்.பி.யின் முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டினாராம். இது சபையில் இருந்த அனைவருக்கும் ஆச்சர்யத்தினை தந்தது. ஏனெனில், மகாராஜா ஒரு சாதாரணப் பிரஜையைத் தொடுவது என்பது அக்காலத்தில் மிக அபூர்வம்.

இன்றைய ஓட வைக்கும் பாட்டுக்கு மத்தியில் அன்றைக்கு தொட வைக்கும் பாடல்களும் இருந்தது என்பது நமக்கும் ஆச்சர்யம்தான்.

●


மைசூர் வாசுதேவாச்சார்

சிறப்பாக 72 மேளகர்த்தா இராகங்களில் ஒன்றான 'தீர சங்கராபரணத்தில்' 'விரைசேர் சடையாய்' என்ற பாடலைப் பாடியுள்ளார் பெருமான் அவர்கள்.

கீர்த்தனைப் பகுதியில் உள்ள சில பாடல்கள் பாடி ஆடுவதற்கேற்ற நாட்டுப்புறப் பாடலான கும்மிப்பாட்டாக அமைந்துள்ளன. 'சண்முகர் கொம்மி' உசேனி இராகத்தில் உள்ளது. 'நடேசர் கொம்மி'-யில் ஆனந்த பைரவி விரவி வந்துள்ளது. கொம்மைபோல் கைகளைக் குவித்துப் வெதும்பைப் பருவ மகளிர் பலரும் வட்டமாய் நின்று கைகளைத் தட்டியும், குவித்தும், வாயாற் பாடிக் கொண்டு சுழன்றாடுதல் 'கொம்மி' எனப்படும். நாட்டுப் புறங்களில் விழாக் காலங்களில் நிலவு ஒளிவிடும் முன்னிரவில் மகளிர் கூடி நடத்தும் கும்மியை தற்போதும் காணலாம்.

இந்த கொம்மி ஆடற்கலை ஆனந்த பைரவி இராகத்தில் அமைந்திருக்கும். தெருக்கூத்து நடத்தும் கலைஞர்கள் ஆனந்த பைரவி இராகத்தில் பாடி ஆடிப் பிழைத்திருந்தனர். இவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி தியாகராஜர் ஆனந்த பைரவி இராகத்தில் அதன்பின் பாடவில்லை என்பது நினைக்கத்தக்கது. 'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்' என்ற அக்கச்சிப் பாடல் எளிய மக்களைக் கவரும். 'ஊது சங்கே' பாடலும் எளிமை, இளமை, இசைத்தன்மை, கருத்துச் செறிவும் கொண்டவை.

வள்ளலாரின் இசைப்புலமையும், இசை மீதான அவரின் பற்றும் பலரும் அறியாத செய்தி என்பது உண்மை. இனியது கொண்டு இனியதற்கினியதைப் பெற வேண்டும் என்பதே வள்ளல் பெருமானின் இசைக் கொள்கை.

**– வ.ச.அபிராமவல்லி, சென்னை-8.**



# ஆரூர் அரசி சங்கீத மயமானவள்

## – முத்துஸ்வாமி தீட்ஷிதர்

முத்துஸ்வாமி தீட்ஷிதர் கமலாம்பாள் மீது இயற்றிய நவாவரணக் கீர்த்தனைகள் கர்நாடகச் சங்கீதத்திற்கு மிகச் சிறப்பானதொரு பங்களிப்பு என்று போற்றப்படுகிறது.

தீட்சிதரின் இசைப்புலமையும், பக்குவ நிலையும், நுண்ணறிவும் இக் கீர்த்தனைகளின் இராக அமைப்புகளில் வெளிப்படுகின்றன. இராகங்களின் நுட்பமான பிரயோகங்கள் இவற்றில் உள்ளடங்கி பிரகாசிக்கின்றன. இராக தேவதைகள் கொலுவீற்றிருக்கும் நாதக் கோயிலாக இக் கீர்த்தனைகள் புகழப்படுகின்றது.

தேவியை தாந்த்ரீக முறையில் வழிபடுவதற்கான வழி வகைகள் நவாவரணப் பாடல்களில் சொல்லப்பட்டு இருக்கின்றன. தேவியை பூஜிப்பதற்குரிய சூத்திரங்கள், மேற்கொள்ள வேண்டிய விரதங்கள் ஆகியவை விளக்கப்பட்டு இருக்கின்றன.

தேவியை நெருங்குவதற்கு ஒன்பது வட்டங்களை கடந்து செல்ல வேண்டும். ஒவ்வொரு வட்டத்துக்கும் குறிப்பிட்ட பூஜைகள் உண்டு. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட பெயர்களும், சக்திகளும் உள்ளன. ஒவ்வொன்றினாலும் கிடைக்கக் கூடிய பலன்களும் வெவ்வேறானவை. ஒன்பது வட்டங்களுக்கும் முறைப்படி பூஜை நடத்தினால்தான் தேவி தன்னுடைய பக்தர்களுக்கு முழு அருளைக் கொடுப்பாள் என்று நம்பப்படுகிறது.

பராசக்தியை ஸ்ரீ சக்கர வடிவில் பூஜை செய்பவர்கள் அதில் அடங்கியுள்ள ஒன்பது சக்கரங்களையும், அவற்றிற்கு உரிய தேவதை களையும், அந்த தேவதைகளுக்குத் தலைவியான ஸ்ரீ சக்ரேஸ்வரியையும் முறையாக வழிபட வேண்டும். பிந்து, திரிகோணம், அஷ்ட கோணம், உள் பத்து கோணம், வெளிபத்து கோணம், பதினான்கு கோணம் என்று அடுத்தடுத்துள்ள ஒவ்வொரு சக்கரத்திற்கும் ‘ஆவரணம்’ என்று பெயர்.

பூபுரத்திலிருந்து பிந்து ஸ்தானம் வரையிலான ஒவ்வொரு ஆவரணங்களையும் ஒவ்வொன்றாகப் பூஜிக்கும் முறையையும், அவற்றுள் எழுந்தளிருக்கும் தேவதைகளின் சக்திகளையும் மிகத் தெளிவாக விளக்குகின்றன. தீட்சிதரின் நவாவரணக் கீர்த்தனைகள்.

ஒன்பது கீர்த்தனைகளைத் தவிர ஆரம்பத்தில் பாட வேண்டிய தியானக் கீர்த்தனை ஒன்றும், முடிவில் இசைக்க வேண்டிய மங்கள கீர்த்தனை ஒன்றும் நமக்குத் தந்து இருக்கிறார் தீட்சிதர். ஆக, பதினோறு கீர்த்தனை களைக் கொண்ட பொக்கிஷமானது இந்த நவாவரணக் கீர்த்தனைகள்.

மேற்படி கீர்த்தனைகளில் புதைந்துள்ள தத்துவங்களையும், மந்த்ர - தந்த்ர தொடர்பான சொற் பிரயோகங்களையும், அவை சுட்டிக்காட்டும் ஆன்மீக நிலைகளையும் தேவி உபாசனையில் அனுபவம் பெற்று, தேவியின் அருளினை குறைந்தபட்சமாவது பெற்று இருப்பவர்களாலேயே உணர்ந்து அனுபவிக்க முடியும்.

தியானக் கீர்த்தனையை தோடி

இராகத்தில் 'கமலாம்பிகே ஆஸ்ரித' என்று ஆரம்பிக்கிறார் தீட்சிதர். கால்கள் இரண்டினையும் மடித்தபடி அமர்ந்து இருப்பவள் கமலாம்பாள் என்பதை விவரிக்கும் விதமாக 'விநோத சரணே' என்று சரணத்தில் குறிப்பிடுகிறார்.

பிரம்மா முதலியவர்களால் பூஜிக்கப்பட்ட தாமரைப் போன்ற பாதங்களை உடையவளும், கமலாலயம் என்னும் தீர்த்தத்துக்கு மகிமை அளித்தவளுமான கமலாம்பிகா தன்னை அண்டியவர்களுக்கு கற்பகக் கொடி போன்று வேண்டியதைக் கொடுக்கிறாளாம்.

கமலாம்பிகா சங்கீதத்தில் அதீத பிரியமுள்ளவளாக இருப்பதால் நல்ல கவிபாடும் திறமையைக் கொடுக்கிறாள் அன்னை. 'அ, க, ச, ட, த, ப முதலிய அக்ஷர சொரூபமாக இருப்பவளே, அகண்டமாயும், ஒப்பற்றதாயும் உள்ள ஆனந்தம் நிறைந்தவளே... என்னைக் காப்பாற்று" என்று வேண்டுகிறார் தீட்சிதர்.

முதல் ஆவரணம் ஆனந்த பைரவி ராகத்தில் 'கமலாம்பா ஸம் ரக்ஷது மாம்' என்று ஆரம்பமாகிறது. இந்த ஆவரணத்திற்கு 'த்ரைலோக்ய மோகன சக்ரம்' என்று பெயர். "எனது இதயம் குடி கொண்டுள்ள திருவாரூரில் வசிக்கும் கமலாம்பிகை என்னை நன்கு காப்பாற்றட்டும்" என்கிறார் பல்லவியில். தாராவென்னும் பிரணவமாகிய கூட்டில் பெண் கிளி போன்றவள் அம்பிகை என்றும் வர்ணிக்கிறார்.

பூபுரமென்னும் மூவுலகங்களுக்கும் மோகத்தை உண்டுபண்ணும் சக்கரத்தில் இருப்பவள் ஜகத் பிரசித்தமான யோக சக்தியை உடையவள். தேவர்களுக்கு சத்ருவான மகிஷாசுரனை நாசம் செய்தவள். சுப்ரமண்யருக்குத் தாயானவள். திரிபுர பட்டணத்தை நாசம் செய்ததால் சந்தோஷமடைந் தவள்... இப்படி கலகலவென்று கமலாம்பிகையை வர்ணித்துக் கொண்டே போகிறார் தீட்சிதர்.

'ஸர்வாசா பரிபூரகச்சக்கரம்' என்று பெயர் கொண்ட இரண்டாவது ஆவரணம் கல்யாணி ராகத்தில் 'கமலாம்பாம் பஜரே' என்று தொடங்கும் பாடல். லெட்சுமி, சரஸ்வதி இவர்களால் சேவிக்கப்பட்ட இரு பக்கங்களை உடையவளாகவும், மிருதுவான வாக்கையும், அழகான பற்களையும், தாமரைப் பூப் போன்ற முகத்தையும் கொண்ட கமலாம்பிகையை "ஏமனமே பஜனை செய்' என்கிறார் தீட்சிதர்.



ஸர்வாசா பரிபூரகச் சக்கரத்திற்கு எஜமானி கமலாம்பிகை. பரமசிவனு டையக் காதலி. துர்வாச மகரிஷியால் பூஜிக்கப்பட்ட ரகசியமான யோகினீ சக்தி. கைவல்யம் என்கிற ஆத்ம சுகத்தினை அளிப்பவள். கர்வ மடைந்த பண்டாசுரனைக் கொன்றவள். நிர்விகல்ப சைதன்ய ரூபி. பூமி, தத்துவமாகியவற்றின் சொரூபி.

மூன்றாவது ஆவரணம், ஸர்வ ஸம்க்ஷோபணச் சக்கரம். சங்கராபரணம் ராகத்திலமைந்த 'ஸ்ரீ கமலாம்பிகயா கடாக்ஷ' என்ற கீர்த்தனை. "ஸ்ரீ கமலாம்பிகையினால் நான் கடாட்சிக்கப்பட்டு சச்சிதானந்தம் நிறைந்த பிரம்ம சொரூபியாய் இருக்கிறேன்" என்கிறார் தீட்சிதர்.

குருகுகனுடைய மகிமை வாய்ந்த 'அஹம்பிரம்மாஸ்மி' என்ற மூன்று பத சொரூபிணியாக இருப்பவளாம் அம்பிகை.

சிகப்பு வர்ணமுள்ள ஸம்ஷோபண

சக்ர ரூபிணி. அவள் வில், அம்பு இவற்றைத் தரிக்கும் கைகளையுடைய கருணைக் கடலான ஜகன்மாதாவை எட்டு வாக் ரூபமான, மிகவும் ரகசியமான வித்யா சொரூபிணியாகப் போற்றுகிறார் தீட்சிதர். சர்வ சௌபாக்கிய நாயக சக்கரமென்னும் நான்காவது ஆவரணம் ‘கமலாம்பிகாயை கனகாம்’ என்ற காம்போதி ராகக் கீர்த்தனை.

கர்மமூலமான ஜன்மம் இல்லாத கமலாம்பிகையை, ஹிமவானின் பெண்ணை ஹ்ரீம் என்ற மந்திரத்தால் பூஜிக்கத் தக்கவளை, துஷ்ட சமூகங்களை சம்ஹாரம் செய்பவளை, கலியினால் ஏற்படும் பாபங்களைப் போக்கடிப்பவளை நமஸ்கரிக் கிறார் தீட்சிதர் இப் பாடலில்.


ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்
(1775 - 1835)

ஸம்க்ஷோபிணி முதலிய சக்திகளோடு கூடிய நான்கா வதான ஆவரணத்தை உடையவளாம் அன்னை. தவம் செய்யும் போது எதனையும் உண்ணாமல் இருந்ததால் அபர்ணை எனும் பெயர் வாய்த்தவள். கபர்ணை எனும் தேவதா ரூபி. ஜங்கமஸ் தாவராதிகளை சிருஷ்டி செய்தவள். ஞானானந்த பூரணகட்டியாகவும் உள்ளவள்.

பைரவி ராகத்தில் ஐந்தாவது ஆவரணம் ‘ஸ்ரீ கமலாம்பாயா நஹிரே ரே சித்த’ எனும் கீர்த்தனை. இந்த ஆவரணத்துக்குப் பெயர்; ஸர்வார்த்த ஸாதக சக்ரம். ‘கமலாம்பிகையைத் தவிர வேறு தெய்வம் எதுவுமில்லை’ என்று குறிப்பிடுகிறார் தீட்சிதர்.

நாதஸ்வரூபமானதும், சூட்சும ரூபமுள்ளதுமான அணிமாதி அஷ்ட சித்திகளைக் கொடுப்பதால் சர்வசித்திப்ரதாதி என்று வழங்கும் பத்து சக்திகளால் ஆராதிக்கப்பட்ட மூர்த்தியாகவும், அத்வைத பிரகாச ரூபியாகவும், அனாதியான மாயரூபமான அவித்யையின் காரிய காரணங்களை நீக்குவதில் மிகவும் சக்தி வாய்ந்த கடாட்ச வீட்சண்யத்தை உடையவளாகவும் இங்கு அம்பிகை சித்தரிக்கப்படுகிறாள்.

அடுத்து புன்னாகவராளி ராகத்தில் ஆறாவது ஆவரணம். ‘கமலாம்பிகாயா ஸ்தவ’ பாடல். ஆவரணத்துக்குப் பெயர்; ஸர்வரக்ஷாகர சக்ரம். தோடி ராக தியானக் கீர்த்தனையில் குறிப்பிட்டது போல் இந்தப் பாடலிலும் அம்பாளை சங்கீத ரசிகை என்கிறார் தீட்சிதர்.

அழகிய புன்னாக விருட்சத்தில் இருக்கும் சிறந்த வண்டுகளை ஜெயிக்கும் கூந்தலை உடைய ஸ்ரீ கமலாம்பிகையின் பக்தன் தான் என்கிறார். ஐம்பது அட்சரங்களை உள்ளே அடக்கியுள்ள குண்டலினி சக்தி ரூபிணியாயும், பத்து முத்திரைகளால் பூஜிக்கப்பட்ட தசரதன் முதலியவர்களால் துதிக்கப்பட்ட குருகுகனுடைய தந்தையான பரமசிவனுக்கு கௌளினீ தேவியாயும், பத்து இந்திரியாய்களின் செய்கை, ஒலி இவற்றை உள்ளடக்கிய யோகினீ சக்தி சொரூபமுடையவளாகவும், யோக சக்தியுடையவளுமான கமலாம்பிகையின் பக்தனாம் தீட்சிதர்.

‘சர்வரோகஹர சக்ரம்’ என்று பெயர் கொண்ட ஏழாவது ஆவரணத்தை சஹானா ராகத்தில் ‘ஸ்ரீ கமலாம்பிகாயாம் பக்திம்’ என்று தொடங்குகிறார்.

திருக்கையில் ஏந்திய வீணையை வாசிக்கும் அம்பிகை சரஸ்வதி ரூபமான, எல்லாவியாதிகளையும் தீர்க்கும்படியான வியாதியற்ற உடலினை நல்கும் ராஜயோகேஸ்வரி என்கிறார்.

‘ஸ்ரீ கமலாம்பிகே அவாவ’ என்று கண்ட ராகத்தில் ஆரம்பமாகிறது எட்டாவது ஆவரணம். ‘சர்வ சித்திப் ப்ரத சக்ரம்’ என்று இந்த ஆவரணத்துக்குப் பெயர்.

ஸ்ரீ சக்ரத்தின் நடுவிலிருக்கும் தனி முக்கோணத்தைக் குறிக்கும்

ஆவரணம். மோட்சத்துக்கான வாசல் இது. கதவிலிருக்கும் மணி பக்தர்களை அழைக்கிறது. இந்த மணியைக் குறிக்கும் விதமாக பாடலைக் கண்ட ராகத்தில் அமைத்து இருக்கிறார் தீட்சிதர்.

உருக்கிய தங்கத்துக்கு சமமான சரீரத்தை உடையவளாகவும், ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதி தைவிகம் என்ற மூன்று வித தாபங்களை போக்கடிக்கும் திரிகோணமாகிற வீட்டில் இருப்பவளாகவும், எப்போதும் முக்திக்கு விளம்பரம் செய்யும் பெரிய மணி ஓசை போன்ற வாசல் கதவுகளை உடையவளாகவும் இங்கே வர்ணிக்கப்படுகிறாள் கமலாம்பிகை.




'ஸ்ரீ கமலாம்பா ஜயதி' என்ற ஆஹிரி ராகத்தில் அமைந்த ஒன்பதாவது ஆவரணத்துக்கு 'ஸர்வானந்தமய சக்ரம்' என்று பெயர். சகல பாக்கியங்களையும், சர்வ மங்கலத்தையும், பேரின்பத்தையும் கொடுத்து ஸ்ரீ லலிதா மகா புத்திரியான சுந்தரி காப்பாற்றுகிறாள். எட்டு வேற்றுமைகளில் சாகித்யம் அமைந்துள்ள அருமையான பாடல் இது.

"வராக அவதாரம் கொண்ட மகா விஷ்ணுவால் பூஜிக்கப்பட்ட மேன்மை பொருந்திய திரிபுர சுந்தரியும், சகல ஐஸ்வர்யங்களை உண்டு பண்ணும் சர்வானந்த சொரூபமான சக்ரத்தில் வீற்றிருப்பவளும், நித்ய சுமங்கலியாகவுமுள்ள ராஜராஜேஸ்வரியை நான் தியானிக்கிறேன்." என்று கீர்த்தனையின் அனுபல்லவியில் இரண்டாம் வேற்றுமையில் சாகித்தியத்தை அமைத்திருக்கிறார் தீட்சிதர்.

"பிரம்ம சொரூபமான பிரகாசத்தை உடையவளே, நாம ரூபங்களினால் அறியப்படுபவளே. காம கலையை காண்பிப்பவளே. சமரசத் தன்மையைக் கொண்டவளே. என் மனதானது உன்னிடத்தில் லயிக்கட்டும்." என்று எட்டாம் வேற்றுமையில் பாடலை நிறைவு செய்கிறார்.

ஒன்பது நவாவரணக் கீர்த்தனைகளை பாடி முடித்துவிட்டு மங்களமாக ஸ்ரீராகத்தில் 'ஸ்ரீ கமலாம்பிகே ஸிவே பாஹிமாம் லலிதே' என்று முத்தாய்ப்பாக பாடி இருக்கிறார் தீட்சிதர்.


மேற்குறிப்பிட்ட பதினோறு கீர்த்தனைகளைத் தவிர, நவாவரண மந்த்ர கீர்த்தனை ஒன்றும் பாடி இருக்கிறார். மத்யமாவதி ராகத்தில் இதை அமைத்து இருக்கிறார். 'ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரீம் மஹாத்ரிபுர ஸுந்தரீம்' என்று ஆரம்பிக்கிறார். 'விதேக கைவல்யம்' எனும் மோட்சத்தை சீக்கிரமாக வந்து எனக்கு அருளி என்னைக் காப்பாற்று' என்று வேண்டுகிறார் பல்லவியில்.

சமஷ்டி சரணத்தில் இச் சரணத்தின் ஆரம்பத்தில் கணபதி, சுப்ரமண்யர், ஸ்ரீ சக்ரத்தின் ஒன்பது ஆவரணங்ளின் மந்திரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. பூபுரம் முதல் பிந்து சக்ரம் வரை சம்ஹார கிரமத்தில் அமைந்துள்ளது. ஸ்ரீ வித்யா உபாசகர்களை அணுகி அப் பெரியோர்களின் மூலமாக மற்ற விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீ நாதானந்த குரு பாதுகைகளை எப்போதும் பூஜிக்கிறேன். நான் சிதானந்த நாதனாக இருக்கிறேன். குபேரனால் துதிக்கப்படுபவளும், கணபதி, குருகுகனின் அன்னையாம் ஈடு இணையற்ற சுப மங்களா... மங்களா தேவி, ஜயமங்களாவான ஸ்ரீ ராஜராஜேஸ்வரியை நான் அனுதினமும் பூஜிக்கிறேன் என்று பாடி முடிக்கிறார் கமலா தேவி மீதான தனது நவாவரணக் கீர்த்தனைகளை தீட்சிதர்.

**– வீயெஸ்வி**

# அன்பே சிவம்


திருமூலர்

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டு கொண்டேன்
உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்தோம்புகின்றேனே!

என்று எண்சான் மனித உடலின் மகத்துவத்தை விவரிக்கிறார் மகரிஷி திருமூலர்.

என்னுளே இருந்த ஒன்றை யானறிந்ததில்லையே
என்னுளே இருந்த ஒன்றை யானறிந்து கொண்டபின்
என்னுளே இருந்த ஒன்றை யாவரும் காண வல்லாரே
என்னுளே இருந்த இருந்து யான் உணர்கின்றேனே!

என்று தவ வலிமையால் தான் கண்டு கொண்டதை தரணியர்க்கு எடுத்துரைக்கிறார் தவச்சீலரும், சித்த புருஷருமான சிவவாக்கியர்.


சிவவாக்கியர்

இறைவன் என்பவன் தனியாக எங்கேயும் இல்லை. அவன் ஒவ்வொருவரது உடலை ஆலயமாகவும், ஆன்மாவையே கர்ப்ப கிரகமாகவும் கொண்டு அதனுள் உறைகிறான். எனவே, நமது உடலையும், உள்ளத்தையும் மாசின்றி தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

“இந்த உடல் உங்கள் சொந்தமல்ல; இது கடவுள் படைப்பின் ஒரு பகுதி. அதனால் இது அவரைச் சேர்ந்தது. அவர் உன்னுள் பரமாத்மாவாக உறைகிறார். உள்ளிருந்து உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். இதை விட்டகல்வதற்கு முன் அதன் சொந்தக்காரரை நீ உணர்ந்து கொள். சீக்கிரம் அவரை இனம் காணு” என்கிறார் பாபா.

ஸர ஹ்ருதம் ஸர்வபூதனாம்
ஏகாத்மா ஸர்வ பூதாந்தராத்மா

என்பது வேத வாக்கு. எல்லா உயிர்களிலும் ஒரே பரமாத்மா உறைகிறான். எனவே, அனைத்து ஜீவர்களிடத்தும் அன்பு, சிநேக மனோபாவம் கொண்டிருக்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

ஒவ்வொரு தனிமனிதனிடத்தும் நான்கு வகை குணங்கள் தென்படும். தெய்வ இயல்பு, மனித இயல்பு, அஸுர இயல்பு, மிருக இயல்பு. சிலரிடம் இந்நால்வகை குணங்களும் அவர்களின் அவ்வப்போதைய சூழ்நிலைக்கேற்ப தோன்றி மறையும். சிலரிடம் சில குணங்கள்பெரும்பான்மை நேரம் கோலோச்சும். இப்படிப்பட்டவர்களையும் நடைமுறை வாழ்க்கையில் நம்மால் காண முடியும். ஆண்டவனே இத்தகைய நால்வகைக் குணங்களைக் கொண்ட தனித்தனி அவதாரங்களை தேவைக்கேற்ப எடுத்திருக்கிறானே!

**– டி.எஸ்.டி. ராயன்**

With best compliments




SMT. THANKAM KRISHNAN MEMORIAL TRUST (REGD.)

NARAYANA VISHWANATH

Chairman

'Gitalaya' AD-48, AD-Block,
1st Street, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26212454 / 26214524
E-mail : nvishwat@gmail.com



SANGEETHA SARIGAMAPADANI Regd. No. TN/CC(S) Dn/386/10-12 RNI. No: 67100/97